ஜெபமே ஜெயம்

டி.ஜி.எஸ். தினகரன்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

Ruby Yesudian
3/17A. Kaveriappa
Lay out
Bangalore - 52.

ஜெபமே ஜெயம்

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road

IMMANUEL GOSPEL LIBRARY
BANGALORE-23
BOOK No. 201

ஜெபமே ஜெயம்

டி. ஜி. எஸ். தினகரன்

கிறிஸ்தவ இலக்கிய சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS 600 003

PRAYER IS VICTORY
by D. G. S. DINAKARAN
in Tamil

©

First printed, 1980
Reprinted, 1980

Cover Design by MADHU ADS.

விலை ரூ. 3·00

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1980. L1938

முன்னுரை

கர்த்தருடைய சித்தத்தின்படி வாழும் ஒரு மனிதனுக்கு ஜெபத்தின் முக்கியத்துவத்தையும், அதன் அம்சங்களையும்பற்றி எளிய முறையில் விளக்கிக் கூறும் சிறு நூல் இது. இந்த நாட்டில் நாம் ஆவிக்குரிய, ஜெப வாழ்க்கைச் சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறோம். தனது ஒப்புக்கொடுக்கப்பட்ட ஜெப வாழ்க்கையின்மூலம் தாம் அனுபவித்தறிந்த உண்மைகளை நூலாசிரியர் சகோதரன் தினகரன் வாசகர்களுக்கும் அவை பயனளிக்கும்படி அவர்களுடன் பகிர்ந்துகொள்கிறார். ஜெபத்தின் இறையியல் நுணுக்கங்களைப்பற்றி நோக்காமல், மெய்யான ஜெபத்தைப்பற்றித் தான் அறிந்துகொண்டவைகளை வாசகர்களுக்குச் சமர்ப்பிப்பதில் வெற்றி காண்கின்றார்.

தன்னுடைய தினசரி அலுவலின் மத்தியிலும், தனது நற்செய்திப் பணிகளுக்கு இடையிலும் இந்த நூலை எழுதுவதற்காக நேரம் ஒதுக்குவது சகோதரன் தினகரனுக்கு ஒரு கடினமான பிரச்சினையாக இருந்திருக்கக்கூடும். அவருடைய ஒப்புக்கொடுக்கப்பட்ட, ஜெப வாழ்க்கையின்மூலம் அவரை அறிந்துகொண்டவர்கள் இந்த நூலை எழுதியமைக்காக அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். இந்த நூலின் அத்தியாயங்களின் மூலம் அவர் அளிக்கும் செய்தி, தேவ வசனத்தை அறிவிப்பவர் என்ற முறையில் அவர் பெற்ற முழுமையான அனுபவங்களின் விளைவே. எளிய முறையிலும், உண்மையை வலுவாகச் சித்திரித்திருக்கும் வகையிலும் அவர் இந்நூலைத் திறமையான முறையில் எழுதியுள்ளார் என்று கூறத்தகும்.

அன்புள்ள தேவனைப் படம்பிடித்துக் காட்டும் முதல் அத்தியாயத்திலிருந்து பரிசுத்தாவியின் வரங்களைச் சுட்டிக்காட்டும் இறுதி அத்தியாயம் வரை இந்தப் பத்து அத்தியாயங்களுமே

வேத ஆராய்ச்சிக்கும், தியானத்துக்கும் ஏற்றவை. புலனுக்குத் தெரியாத, ஆனால், அருகிலிருக்கும் ஒருவர் நமது ஜெபங்களைக் கேட்டு பலனளிக்கிறார் என்பதும், நமது தேவைகளை அவரிடம் கேட்கும்போது தமது அளவற்ற பொக்கிஷத்திலிருந்து தாராளமாய்க் கொடுக்கிறார் என்பதும் நித்திய உண்மையைப்பற்றிய எளிய வாக்கியங்கள். ஆனால், அவை ஒருவருடைய சொந்த அனுபவத்தின்மூலம் விளக்கப்படும்போது, நமக்கு விலைமதிக்க முடியாத பொக்கிஷங்களாகின்றன. ஜெப வாழ்க்கையை அசிரத்தையுடன் அணுகுவதின் அபாயங்களை சகோதரன் தினகரன் திறமையுடன் விளக்கியுள்ளார். நமது ஜெப வேளை, நமது கர்த்தரும் இரட்சகருமானவருடன் முகமுகமாகச் சஞ்சரிக்கும் வேளையாக மலரும் என்ற நம்பிக்கையுடனும், நிச்சயத்துடனும் அவர் நூலை முடிக்கின்றார்.

எப்போதும் தங்களுடைய வாழ்க்கையில் கர்த்தருடைய வழிகாட்டுதலையும், ஆதரவையும் விரும்பித் தேடுவோருக்கு ஏற்ற வகையில் எழுதப்படும் இத்தகைய நூல்கள் வெளிவருவது மிகவும் நல்லது. ஆவிக்குரிய வாழ்க்கையின் தாகமுடையோருடன், தனது ஆழமான அனுபவங்களின் மூலமும், முதிர்ந்த சிந்தனைகளின் மூலமும் தான் கண்ட உண்மைகளைப் பகிர்ந்துகொள்வதில் சகோதரன் தினகரன் வெற்றி பெறுகிறார். தேவன் சகோதரன் தினகரனையும், அவர் உழைப்பின் பலனாகிய இந்த நூலையும் என்றும் ஆசீர்வதிக்கும்படி அவரை வேண்டுகிறேன்.

சென்னை—600 086
1—10—1979

என். டி. அனந்தராவ் சாமுவேல்
பிரதம அத்தியட்சர்

பொருளடக்கம்

1. 'பிரார்த்தனை கேட்கும் பெம்மான் (தேவன்)' .. 1
2. 'நான் அவரை (ஆண்டவரை) எங்கே கண்டு சந்திக்கலாம்?' 6
3. 'துதிகளின் மத்தியில் வாசம் செய்பவர்!' .. 13
4. 'உன் இருதயத்தை ஊற்றிவிடு!' 20
5. 'தடைகளை நீக்கிப்போடுகிறவர் . . . நடந்துபோகிறார்' 24
6. 'எங்களுடைய போராயுதங்கள் . . . தேவ பலமுள்ளவைகள்' 29
7. 'பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்' .. 35
8. 'தேவனோடே மனுஷருக்காக வழக்காடுகிறவர்' 46
9. 'பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன்!' 55
10. 'ஞான வரங்களையும் விரும்புங்கள்!' .. 62

1

'பிரார்த்தனை கேட்கும் பெம்மான் (தேவன்)'

'பிரார்த்தனை கேட்கும் பெம்மானே—இந்த
நரர் பலவீனம் பாராதருள் கோனே!
சரணென்றுன் செம்பாத மலரடி சேர்ந்தோர்
கரத்தைப் பிடித்துக் கவலை தீர்த்தோனே!'

(கீர்த்தனை 108)

பல்வேறு காலங்களில் வாழ்ந்த மக்கள் பலவிதமான பெயர்களை தேவாதி தேவனுக்குச் சூட்டியிருப்பதைப் பரிசுத்த வேதாகமத்திலே நாம் காண்கிறோம். ஆகார் என்ற அடிமைப் பெண் அவருக்கு 'நீர் என்னைக் காண்கிற தேவன்' என்று பேரிட்டாள் (ஆதி. 16:13). 'ஜெபத்தைக் கேட்கிறவர்' என்று தாவீது தேவனுக்குப் பெயர் சூட்டினான் என்பதைப் பின்வரும் வார்த்தைகளால் அறியலாம்:

'மெய்யாய்த் தேவன் எனக்குச் செவி கொடுத்தார்;
என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்!
என் ஜெபத்தைத் தள்ளாமலும் தமது கிருபையை
என்னை விட்டு விலக்காமலும் இருந்த
தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக!'

(சங். 66:19,20)

இதிலிருந்து தாவீதின் ஜெப வாழ்க்கை எத்துணை வல்லமையுள்ளதாயிருந்தது என்பதை நாம் எளிதில் புரிந்துகொள்ளக் கூடும். ஆகவே அவன் தன் இருதயத்தின் ஆழத்திலிருந்து 'ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்

மிடத்தில் வருவார்கள்' என்று பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எழுதிவைத்தான் (சங். 65:2).

வேதாகமத்தில் தேவனுக்குப் பதினுறு சிறப்புப் பெயர்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் அவருடைய பண்புகளைத் தெரிவிக்கின்றன. 'நம் நோய்களை குணமாக்குகிற கர்த்தர்' (யெகோவா—ரொப்பேக்கா—யாத். 15:26). 'நமது சமாதானமாயிருக்கிற கர்த்தர்' (யெகோவா—ஷாலோம்—நியா. 6:24). மற்றொன்று 'யெகோவாயீரே' என்னும் ஓர் இனிய பெயராகும். 'நம் தேவைகளை அருளுகிற தேவன்' என்பது இதன் பொருள் (ஆதி. 22:14). 'ஜெபத்தைக் கேட்கிறவர்' என்ற கருத்தும் இந்தப் பதத்தில் பொதிந்துள்ளது. இங்ஙனம் பதினுறு வெவ்வேறு பெயர்கள் உள்ளன.

நண்பரே! தேவாதி தேவன் நம் வாழ்க்கையின் தேவைகள் அனைத்தையும் அருள விரும்புகின்றார் என்பது எவ்வளவு இனிய செய்தி!

'நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்' (1 தீமோ. 6:17) என்று வேதம் அவரைக் குறித்துச் சொல்கிறது. எனவே மக்களுடைய சகல தேவைகளையும் அவர்களுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து ஏறெடுக்கும் பிரார்த்தனையின் வாயிலாக அறிந்து, அவற்றை அவர்களுக்கு அளிப்பது தேவனுடைய இனிய பண்பாம். நண்பரே, இனி நீர் தேவனை நோக்கிப் பிரார்த்திக்கும்பொழுது, உம்முடைய ஆன்மீகக் கண்களுக்கு முன்னர் நிறுத்தி நீர் வழிபடும் நம் தேவன், உம் பிரார்த்தனைக்கு, நீர் வாஞ்சிப்பதைவிட அதிகமாகப் பதிலருள ஆசையோடு காத்திருக்கின்றார் என்பதை நினைவிற்கொள்வீராக (எபே. 3:20). ஜெபங்களுக்குப் பதிலளித்தல் இறைவனின் இனிய பண்புகளில் ஒன்றாகும், ஆகவே உம் உள்ளம் தைரியமடைவதாக!

இராணுவ வீரன் ஒருவனுடைய வாழ்வில் நிகழ்ந்த உள்ளமுருக்கும் சம்பவம் ஒன்றை ஒருநாள் வாசித்தேன். அவன் பலருக்கும் பெருந்தொகை கடன்பட்டிருந்தான். தன் அலுவல்களையெல்லாம் முடித்துவிட்டு ஒரு நாள் இரவு அவன் படுக்கைக்குச் செல்லுமுன்னர் தன் மேஜையண்டை உட்கார்ந்து, தான் கொடுக்கவேண்டிய கடன் மொத்தம் எவ்வளவு என்று ஒரு காகிதத்தில் எழுதினான். அது ஒரு பெருந்தொகை என்று கண்டபோது அவனுடைய இருதயமே நின்றுவிடும்போலிருந்தது. மன வேதனையால் தன்னையும் அறியாமல் அந்தத் தொகையின்கீழ் பின்வருமாறு எழுதினான்:

'இதையெல்லாம் கொடுத்துத் தீர்ப்பவர் யார்?' பின் அவன் ஆழ்ந்த கவலையில் மூழ்கினவனாகத் தன்னையுமறியாமல் மேசையின்மேல் தலையை வைத்து அப்படியே உறங்கிவிட்டான். இராணுவ விதிக்கிணங்க விளக்கினை அணைக்க அவன் மறந்துபோனான். நடுநிசியில் அவ்வழியே மாறுவேடத்தில் வந்த அந் நாட்டு மன்னர், இராணுவ விதிக்கு மாறாக அக் கூடாரத்தில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருப்பதற்குரிய காரணமென்ன என்று பார்க்கக் கூடாரத்தினுள் மெல்ல நுழைந்து பார்த்தார். மேசையின் மேல் தலை வைத்து உறங்கிக்கொண்டிருந்த வீரனைக் கண்டார். அவன் கையிலிருந்த காகிதத்தையும் உற்று நோக்கினார். அதில் கடைசியாக எழுதப்பட்டிருந்த வினா மன்னரின் உள்ளத்தை உருக்கிற்று. மேசையிலிருந்த பேனாவை எடுத்து அவ் வினாவுக்கடியில் அழகாகத் தம் கையெழுத்தைத் தீட்டினார். மறு வினாடியே அரவமின்றி அங்கிருந்து அகன்று இருளில் மறைந்தார்.

மறுநாள் காலை! ஆதவன் உதித்தான்! போர் வீரன் தன் கண்களைக் கசக்கி எழுந்தான்; அவனோடே கடன் தொல்லை பற்றிய கவலையும்கூட எழுந்தது. கவலை தோய்ந்த மனத்துடன், கலங்கிய கண்களைத் தன் முன் கிடந்த காகிதத்தில் திருப்பினான். என்னே ஆச்சரியம்! அவன் உள்ளம் திடுக்கிட்டது. நாடாளும் மன்னனின் கையெழுத்து தன் கேள்வியின்கீழ் இடப்பட்டிருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தான். எனினும் இரவில் என்ன நிகழ்ந்திருக்கக்கூடும் என்பதை அவன் யூகித்துணர்ந்தவுடன் பெருமகிழ்ச்சி கொண்டான். துள்ளிக் குதித்தான், ஆடினான், பாடினான். 'நான் பட்ட

கடனையெல்லாம் என் தேசத்து மன்னன் கொடுத்துத் தீர்க்கப் போகின்றார். ஆ! நான் எவ்வளவு பேறுபெற்றவன்!' என்று நடனமாடினான்!

நண்பரே, இது ஓர் இனிமையான கதையல்லவா? 'இனிய கதைதான்; எனினும் என்னுடைய வாழ்க்கையில் இவ்வாறு நடக்கக்கூடுமோ?' என்று ஒருவேளை நீர் ஐயுறலாம். தயவு செய்து ஒருபோதும் மாறாத வேத வசனம் விளம்புவதைச் சற்றே காண்க. 'தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் (இயேசுவாகிய) அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றை யும் நமக்கு அருளாதிருப்பதெப்படி (ரோ. 8:32)?' ஆச்சரிய மாயிருக்கிறதல்லவா! ஆம்! தேவாதி தேவன் அவருடைய படைப்புகளுள் ஒன்றான மனுக்குலத்தின்மீது மிகவும் அன்பு கூர்ந்தார். ஆகவே, மனுமக்களைத் தம்மிடமிருந்து பிரிக்கும் பாவத்தைத் தகர்த்தெறிந்து மீண்டும் அவர்களைத் தம்மோடு இணைக்குமாறு தம் சொந்தக் குமாரனாகிய இயேசுவையே இவ்வுலகிற்கு அனுப்பினார். நமக்காக அவரைச் சிலுவையில் பலியாக்கினார். 'இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங் களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது' (எபி. 10:10–14; 1 யோ. 1:7). மனிதனைத் தேவனோடு ஒப்புரவாக்கவே இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்மை பலியாகச் செலுத்தினார் என்ற உண்மையை தன்னுள்ளத்தில் ஏற்றுக்கொள்கிற எவ னும் தேவனுடைய பிள்ளையாக அவரால் ஏற்றுக்கொள்ளப் படுகிறான். இத்தகைய தேவனுடைய பிள்ளைகளுக்கே முன் கூறிய வேத வசனம் இனிய உறுதியை அளிக்கின்றது. மனு மக்கள்மேல் தாம் வைத்த அன்பின் காரணமாகத் தமது சொந்தக் குமாரனாகிய இயேசுவைச் சிலுவையின்மேல் பலி யிட அனுமதித்த பிதாவாகிய தேவன், 'அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?'

நண்பரே, உங்களிடம் ஒரு விலையுயர்ந்த வானொலிப் பெட்டி இருக்கலாம். தூரமான இடத்திலுள்ள ஒரு நிலையத்திலிருந்து மிகவும் அருமையான இசை ஒலிபரப்பப் பட்டுக்கொண்டிருக்கலாம். ஆனால் வானொலிப் பெட்டியை இயக்கி அந்தக் குறிப்பிட்ட நிலையத்துக்கு நீங்கள் திருப்பினால்

தான் நீங்கள் அந்த அழகிய பாடலைக் கேட்கமுடியும். கிருபை யுள்ள நம் பரலோகத் தந்தை நம்முடைய தேவைகளை யெல்லாம் அறிவார். நம்முடைய ஜெபங்களையும், விண்ணப்பங்களையும் கேட்க அவர் எப்போதும் தமது செவியைச் சாய்த்துக்கொண்டிருக்கின்றார். ஆகவே, நம் முடைய ஜெபங்கள் கேட்கப்படுமோ என்று நாம் அஞ்சிடத் தேவையில்லை. எவ்வளவு ஆறுதலான செய்தி இது! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.

'இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்க வில்லை. கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்' (யோ. 16:24).

ஆகவே, கிறிஸ்துவினுடைய அருள்வாக்கின்படி உம் வாழ்க் கைத் தேவைகளைக் கிறிஸ்துவுக்குத் தெரிவிப்பீராக. நிச்சய மாக அவர் உம் ஜெபங்களைக் கேட்பார். உமக்குப் பதிலளிப் பார். உம்மைக் கைவிடமாட்டார்.

2

‘நான் அவரை (ஆண்டவரை) எங்கே கண்டு சந்திக்கலாம்?’

‘எங்கே தேடுவேன் நான் எங்கே தேடுவேன்
என் நேசர் இயேசுவை நான் எங்கே தேடுவேன்
காலை தேடுவேன் நேசரைக் கண்டு மகிழுவேன்
கருத்தாய்ப் பாடுவேன் நேசரின் காதல் நாடுவேன்.’

யோபு என்னும் ஒரு பக்தனைக் குறித்து வேதாகமத்தில் படிக்கிறோம். முற்றிலும் எதிர்பாராவிதத்தில் துன்பங்கள் அடுத்து அடுத்து அவனைத் தொடர்ந்தன. ஒரே நாளில் அவனுடைய ஏழு குமாரர்களும், மூன்று குமாரத்திகளும் ஒருமிக்க மாண்டுபோயினர். அவனுடைய செல்வமாயிருந்த ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர் மாடுகளும், ஐந்நூறு கழுதைகளும் ஒரே நாளில் அழிந்தொழிந்தன. யோபுவின் உள்ளம் மிகுந்த துயரத்தால் நிறைந்தது. அவை மட்டுமோ? அவனுடைய உடலிலும் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் கொடிய பருக்கள் தோன்றின. அவன் ஓர் ஓட்டை எடுத்து, அந்தப் பருக்களைச் சொறிந்துகொண்டு மிகவும்வேதனைப்பட்டான். இந்தச் சரீர வேதனையோடுகூட யோபுவின் மனம் நோகும்படி அவனுடைய மனைவியும், வேலைக்காரரும் அவனை ஏளனம் செய்ய ஆரம்பித்தனர். யோபுவுக்கு ஆறுதல் சொல்ல வந்த அவனுடைய அருமை நண்பர்கள் மூவருங்கூட மனமுடைந்து போய், அவனோடு சேர்ந்து அழுது புலம்பினர். எவ்விதத்திலும் மன நிம்மதியற்ற நிலையில் உழன்று தவித்தவனாய்

யோபு பின்வருமாறு கூறினான்: ‘நான் அவரை (ஆண்டவரை) எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும்; அப்பொழுது நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்து சேர்ந்து, என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய் வைத்துக் காரியத்தை ரூபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன். அவருடைய மறுமொழிகளை நான் அறிந்து, அவர் எனக்குச் சொல்வதை உணர்ந்துகொள்ளுவேன்’ (யோபு 23:3–5).

மேற்கண்ட வசனங்கள் யோபுவின் உள்ளம் தேவனை எவ்வளவு ஆவலாய்த் தேடியது என்பதைப் புலப்படுத்துகின்றன. ஏனென்றால் அவனுடைய மிக இக்கட்டான அவல நிலையில் அவனுக்கு விடுதலை தர வல்லவர் தேவனைத் தவிர வேறொருவரும் இலர் என்பதை யோபு நன்கு உணர்ந்திருந்தான். அவனுடைய வேதனை அத்துணை மிகுதி!

இன்றும் நம் தினசரி வாழ்க்கையில் பலவிதமான பிரச்சினைகள் நம்மைச் சூழும்பொழுது, பிறருடைய உதவியாற்கூட சித்திபெற முடியாத நிலைக்கு நாம் வரும்பொழுது நம்முள்ளம் நமக்குள் கலங்குகிறது, தியங்குகிறது! கொடிய நோயினால் வருந்தி, மருந்துகளினால் பயனில்லை என்ற நிலைவரும்பொழுது, ‘ஐயோ! எல்லாம் வல்ல இறைவனை நான் எங்கே காணலாம்? அவரிடமிருந்து நான் சுகத்தைப் பெற்றுக்கொள்வேனோ!’ என்று புலம்பிக் கதறுகின்றோம். ‘தம்பி, மனிதர்கள் செய்யக்கூடியவை யாவும் செய்து முடித்தாயிற்று. இனி இக்காரியத்தில் உனக்கு ஆண்டவர் மட்டுமே அருள்புரியவேண்டும்!’ என்று நம்மேல் பரிவுடைய உற்றார், உறவினர் ஓர் இக்கட்டான நிலையில் கூறும்பொழுது, ‘எல்லாம் வல்ல இறைவனை நான் எங்கே கண்டு அவருடைய உதவியைப் பெறக்கூடும்? எவ்வாறு அவருடைய ஆசீர் பெற இயலும்?’ என்று நம் உள்ளம் துடிக்கிறது.

யோபுவும் அவ்வாறே இக்கட்டான நிலையில் புலம்பினான். இறுதியில் அவன் இறைவனைக் கண்டுபிடித்தான். ‘என் காதினால் (தேவனாகிய) உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன், இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது’ (யோபு 42:5) என்று மனமகிழ்ந்து ஆர்ப்பரித்தான். எவ்

வாறு அவன் தேவனைக் கண்டுபிடித்தான்? தன் உள்ளத்தில் தேவனைத் தியானித்து, அவரிடம் தன் வேதனைகளையெல்லாம் சொல்லி, அவருடைய இரக்கத்திற்காகக் கெஞ்சினதால் அவன் தேவனைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதனை யோபு 9:15 மூலம் அறிகின்றோம்.

ஆம், எல்லாம் வல்ல ஆண்டவனை, அனைத்துலகங்களையும் படைத்த பராபரனை இருதயத்தின் ஆழத்தில் நினைத்து, நம்முடைய துயரங்களையெல்லாம் அவரிடத்தில் சொல்லி, விடுதலைக்காகக் கெஞ்சுவதே ஜெபமாகும்.

சகல நம்பிக்கைகளையும் இழந்த நிலையில் 'அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்' *(யோபு 13:15)* என்று மனதில் தீர்மானித்துக்கொண்டு அவரிடம் நம் குறைகளையும் தேவைகளையும் தாழ்மையோடு எடுத்துக்கூறி பரிகாரம் தேடுதலே ஜெபம். ஆண்டவருடைய திருப்பாதத்தில் உள்ளத்திலுள்ள எல்லாக் கவலைகளையும் ஊற்றிவிடுதலே ஜெபம் *(சங். 62:8; 1 சாமு. 1:15)*.

பல ஆண்டுகளுக்கு முன்னர் முதலமைச்சர் ஒருவர் ஒரு நகரத்திற்கு வருகை புரிந்தார். ஏராளமான மக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு நெருக்கினர். எதற்காக? அவரை வாழ்த்துவதற்காக, அவரைக் கண்டு மகிழ்வதற்காக! அதே சமயம் மிக மெலிந்த, எளிய தோற்றமுடைய ஒருவர் தம் கையில் ஓர் உறையிலே சில ஆவணங்களையும் ஏந்திக்கொண்டு எப்படியாகிலும் தன் அருகில் வந்துசேர அரும்பாடுபட்டுக் கொண்டிருப்பதை முதலமைச்சர் கவனித்தார். காவலரை நோக்கி அந்த மெலிந்த எளிய நபரைத் தன்னிடம் அழைத்து வருமாறு பணித்தார். அவ்வாறே காவலரும் மிகவும் சிரமத்தோடு மக்கள் கூட்டத்தினிடையே அவரை முதலமைச்சர்பால் சேர்த்தார். முதலமைச்சர் முதியவரை நோக்கி, 'நான் உங்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டுமா? சொல்லுங்கள்' என்று கூறினார். முதியவர் கண்ணீர் வழிய வழியத் தன் குறைகளை முதலமைச்சரிடம் உருக்கமாக எடுத்துரைத்தார். அவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் என்றும், ஓய்வுபெற்று எத்தனையோ ஆண்டுகளாகியும் இன்னும் அவருக்கு ஓய்வுகால ஊதியம் அனுமதிக்கப்படவில்லை என்றும் விரிவாகத் தன்

சோகக் கதையைச் சொன்னபொழுது முதலமைச்சரின் உள்ளம் உருகியது. அக்கணமே பக்கத்திலிருந்த அலுவலரிடம் தாமதமின்றி அவ்வாசிரியரின் குறையைத் தீர்க்குமாறு கட்டளையிட்டார்.

நண்பர்களே, முதலாவது அந்த ஏழை ஆசிரியர் எப்படியாவது தான் முதலமைச்சரை அணுகிடவேண்டுமென்று முயன்றார். பின் இரண்டாவது, முதலமைச்சரைக் கண்டுகொண்டபொழுது மிகுந்த தாழ்மையோடும் கண்ணீரோடும் தமது குறைகளையும், தேவைகளையும் தெளிவாக அவரிடம் எடுத்துரைத்தார். பலனைப் பெற்றார்! ஜெபம் என்பது இதுபோன்றதுதான். மனதில் தேவனைத் தியானித்து அவரை அணுகி, அவரிடம் நம் வாழ்க்கைத் தேவைகளை உள்ளத்தின் ஆழத்திலிருந்து விண்ணப்பித்தலே ஜெபமாகும்.

'தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பதிலளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்' *(எபி. 11:6)* என்று வேதம் இதனை விளக்குகிறது.

பரிசுத்த வேதாகமத்திலும் ஓர் எடுத்துக்காட்டைக் காணலாம். மாற்கு 10:46–52ல் உள்ளமுருக்கும் காட்சியொன்றைப் பார்க்கிறோம். தேவகுமாரனாகிய இயேசு திரளான மக்களோடு எரிகோ நகரத்தை விட்டுப் புறப்பட்டு வருகின்றார். அப்பொழுது வழியோரத்தில் உட்கார்ந்திருந்த பர்திமேயு என்ற குருடன் ஒருவன் இயேசுவுக்குக் கேட்கத்தக்கதாகப் பலமாகக் கத்துகிறான். 'இயேசுவே! தாவீதின் குமாரனே! எனக்கு இரங்கும்!' என்று முறையிடுகிறான். அக்குரலைக் கேட்டவுடன் இயேசு அப்படியே நின்றுவிடுகிறார். அன்போடு பர்திமேயுவைத் தன்னருகில் அழைத்துவரச் செய்கிறார். அவனைப் பார்த்து, 'நான் உனக்கு என்ன செய்யவேண்டும்?' என்று வினவுகின்றார். அக்குருடனின் விருப்பப்படியே அவனுக்குப் பார்வை வழங்கிச் செல்கிறார்.

நண்பர்களே! பர்திமேயுவின் ஜெபத்திற்குத் தாமதமின்றி உடனே பதிலளிக்கப்பட்டது.

'இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்' *(எபி. 13:8)*. அவர் இன்றும் அன்பில் மாறாதவ

ராகவே இருக்கின்றார். மத்தேயு 28:20ல் மொழிவதுபோல, இயேசுகிறிஸ்து எப்பொழுதும் நம்முடனேகூட இருக்கிறார். அப்போஸ்தலர் 17:27ன்படி, 'அவர் நம்மில் ஒவ்வொருவருக்கும் தூரமானவரல்லவே.'

'தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.'

'அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்' (சங். 145:18,19).

அன்பார்ந்த வாசகரே! இதை நீர் வாசித்துக்கொண்டிருக்கும்பொழுதே தேவன் உமக்கு மிக அருகில் இருக்கின்றார் என்பதை நிச்சயமாய் அறிந்துகொள்வீராக. அவரை உம்முடைய உள்ளத்தில் தியானித்து உம்முடைய தேவைகளையெல்லாம் அவரிடத்தில் தாராளமாய் சொல்வீராக. அதைத் தேவன் கவனித்துக் கேட்பார். உம்முடைய விண்ணப்பங்களுக்கு அவர் விடையளிப்பார்.

'காணக்கூடாத தேவனை தியானிப்பது எங்ஙனம்?' என்னும் கேள்வி அடுத்து உம் மனதில் எழலாம். தேவன் 'அதரிசனமானவர்' (எபி. 11:27). அவர் 'ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறார்' (1 தீமோ. 6:16; யாத். 33:20). இவ்வாறெல்லாம் தேவனைக் குறித்து வேதம் விளம்பியபோதிலும் காணக்கூடாத இறைவன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யாவரும் காணக்கூடியவராய் மானிட வடிவெடுத்துப் பூமியில் இறங்கினார். எல்லோரும் அவரைப் பார்க்க முடிந்தது (2 பே. 1:16; 1 யோ. 1:1; 1 தீமோ. 3:16; லூ. 1:2).

அவரைக் கண்டவர்கள் காணக்கூடாத தேவனையே கண்டவராவர் என்று இயேசு பகிரங்கமாய்க் கூறினார் (யோ. 14:9). ஆகவே, தேவகுமாரனாகிய இயேசுவைச் சிலுவையில் தொங்குபவராக நம் மனக்கண்முன் கொணர்ந்து, தியானித்து, ஜெபித்தல் நம் மனதை இறைவனை நோக்கி ஒருமுகப்படுத்த ஒரு வழியாம்!

'இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்டவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்' (1 கொ. 2:2).

'இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே' (கலா. 3:1).

மேற்கண்ட வேத வாக்கியங்களின்படி நாம் ஜெபத்தில் ஆழ்ந்திடும்போதெல்லாம் சிலுவைக் காட்சியை நம் மனக்கண்முன் நிறுத்துதல், சகல தீய எண்ணங்கள் மனதில் எழாதவாறும், எண்ணங்கள் சிதறாதவாறும் நம்மைக் காக்கும்.

'தொங்கும் சிலுவைக் காட்சி கண்டேன்
உள்ளம் துடிக்குதையோ!
பஞ்சமா பாவி என் தஞ்சம் உன்
ஐந்து காயமல்லோ!
உன்னைப் போல யாரோ
என்னை நேசித்தாரோ?—இயேசையரே.'

இவ்வாறு ஒரு பக்தன் பாடியுள்ளார். அதன்படி சிலுவையின் காட்சியை நினைத்து ஜெபிக்க நாம் முற்படும்போது கல்வாரிச் சிலுவையில் வெளிப்பட்ட இறைவனின் அன்பு நம் உள்ளத்தைத் தூய்மையாக்குகின்றது. நமது சிந்தனை அலைகள் அங்குமிங்கும் சிதறி ஓடாமல் தடுத்து நிறுத்தப்படுகின்றன. நம் மனம் சிலுவைநாதர் மேலேயே ஒன்றி நிற்கும்படிச் செய்கிறது.

மற்றொரு ஐயம் நம் மனதில் எழலாம். 'இறைவன் மிக மிகப் பெரியவர். அவரிடம் சென்று நம் அன்றாட வாழ்க்கைக்குரியவற்றைச் சொல்வதும் வேண்டுவதும் தகுமோ?' என்று கேட்கலாம். வேதாகமத்தில் சான்று ஒன்றுண்டு: 'யெப்தா என்றொரு பராக்கிரமசாலி இருந்தான். அவன் ஒரு பரஸ்திரீயின் குமாரன் (நியா. 11:1). அவனை இஸ்ரவேல் தேசத்திலிருந்த பெரியவர்கள் அழைத்துத் தங்கள் தேசத் தலைவனாக்கினர். தலைவனானவுடன் யெப்தா செய்த முதற் செயல் இதுதான்: 'யெப்தா தன் காரியங்களையெல்லாம் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியில் சொன்னான்'

(நியா. 11:11). ஆம், அவன் தன் மனதிலிருந்ததையெல்லாம் தேவனிடம் சமர்ப்பித்துவிட்டான்.

'நீங்கள் ஒன்றிற்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்' (பிலி. 4:6).

20ம் நூற்றாண்டில் வாழும் நமக்கு இவை உரியனவே. எனவே ஜெப நேரத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவைக் காட்சியை நம் மனக்கண்முன் நிறுத்தி, அவரிடம் நம் தேவைகள் அனைத்தையும் சொல்வோமாக. 'பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா (மத். 7:11)?' இந்த அருமையான வாக்கின்படியே பரம பிதாவாயிருக்கிற தேவன் நம்முடைய விண்ணப்பங்களைக் கேட்டு, நமது தேவைகள் அனைத்தையும் நிச்சயமாய் அருளிச் செய்வார்!

3

'துதிகளின் மத்தியில் வாசம் செய்பவர்!'

'எல்லையில்லா கிருபைகள்
ஏற்று நிறைந்திருக்கும்
எல்லா நாளும் மாறாச் செல்வம்
ஏசுவென்ற பெயரே
என்னாண்டவா, என் ஜீவனே
என் மார்க்கமே முடிவே
என்னால் வருந்துதியை நீரே
ஏற்றுக்கொள்ளும் தேவே!'

சிலுவையிலறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை நம் மனக்கண்முன் நிறுத்தி சிந்தனை சிதறாமல் ஒருமுகமாக அவரைப் பல மணி நேரங்கள் தியானிக்கவேண்டுமானால் நாம் கடைப்பிடிக்கவேண்டிய மற்றொரு காரியமும் உண்டு. ஸ்தோத்திரங்களையும், துதிகளையும் நம்முள்ளத்தின் ஆழத்திலிருந்து அவருக்குச் செலுத்துவதே அக்காரியமாம்.

அன்றாட வாழ்க்கையில் உயர் பதவியில் உள்ளவர்களையும், செல்வம் நிறைந்தவர்களையும் காணுங்கால், உடனே அவர்களுக்குப் பணிவோடு வணக்கம் செலுத்துதல் உலக மரபு. அவ்வாறிருக்க, நம்மையும் மற்றெல்லாவற்றையும் படைத்துக் காத்துப் பராமரித்து வருகின்ற ஆண்டவருக்கு நாம் மகிமையைச் செலுத்துவது எத்துணை அவசியம்! ஆம், சிலுவையில் அறையுண்ட இயேசுவை நம் மனக்கண்முன்னர் நிறுத்திய பிறகு, அடுத்து நாம் செய்யவேண்டியது,

அவருக்கு மகிமையையும், துதியையும், ஸ்தோத்திரங்களையும் செலுத்துவதே நல்லது. இனி நாம் தேவனைத் துதிப்பதற்குரிய சில ஏதுக்களைத் தியானிப்போம்.

1. ‘அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்’ (சங். 105:2). ‘தேவன் அதிசயமானவர்’ (நியா. 13:8; ஏசா. 9:6). ‘அதிசயங்களைச் செய்கிறவர்’ (ஏசா. 25:1; சங். 36:10).

வேதப் புத்தகம் முழுவதும் தேவன் செய்த அதிசயங்கள் பல காணக்கிடக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் நினைத்து நினைத்து அதற்காக அவருக்கு மகிமையைச் செலுத்தும் பொழுது, ‘இத்தனை அற்புதங்களைச் செய்த அதிசயமான தேவன் எனக்கும் அற்புதங்களைச் செய்யாரோ?’ என்ற திட நம்பிக்கை நம் உள்ளத்தில் பிறக்கிறது. மனப் பாரத்தோடும், துயரத்தோடும் ஜெபிக்கச் செல்லும் உம்மை இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசம் ஆட்கொள்ளுகின்றது.

பல ஆண்டுகளாக காச நோயால் வருந்தி தன் இரண்டு நுரையீரல்களையும் அநேகமாய் இழந்துபோன பதினேழு வயதுள்ள பெண் ஒருத்தி இருந்தாள். ஒருநாள் அவளுக்காக ஜெபிக்கும்படி, ஸ்மித் விகின்ஸ்வொர்த் என்ற தேவனுடைய மனுஷன் சென்றார். அந்தப் பெண்மணியின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த சமயந்தான் அவர் அப் பெண்ணைச் சந்தித்தார். அந்தப் பெண்ணின் தலையின்மேல் கைகளை வைத்து ஊக்கமாய் ஜெபித்தார். ஆனால் அச்சணமே, அந்தோ அவளுடைய உயிர் பிரிந்தது, போதகர் திகைத்தார். ‘நான் ஜெபிக்கும் வேளையிலே இப் பெண் மரிப்பதைக் காணவா இவ்வாறு பல மைல்கள் கடந்து வந்தேன்’ என்று அங்கலாய்த்தார். மறுகணம் தேவாதி தேவனின் வல்லமை பற்றிய எண்ணம் அவருள்ளத்தில் பளிச்சிட்டது. தன்னையும் அறியாமல், ‘என் தேவன் சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரியச் செய்த தேவன்! அவர் இந்தச் சூழ்நிலையிலும் எனக்கு வெற்றி தரவல்லவர்!’ என்று உரக்கக் கூறினார். அதிசயங்களைச் செய்யும் தேவன்மேல் தன் கண்களை ஏறெடுத்தார். தேவனும் அவருடைய விசுவாசத்தை அங்கீகரித்தார்.

அப்பொழுது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அருகிலிருந்த ஜன்னலுக்கு அப்பால் இயேசுகிறிஸ்துவின் இன்முகம் தோன்றியது. அதிலிருந்து புறப்பட்ட கணக்கற்ற கருணைக் கதிர்கள் உயிர்பிரிந்த நங்கையின் சடலத்தின்மேற் பாய்ந்தன. அதோ! அவள் உயிர் திரும்ப வந்தது. மேலும் அதிசயமென்னவென்றால், அவளுடைய பாழடைந்துபோன இரு நுரையீரல்களும் ஒரே நொடியில் நூற்றுக்கு நூறு அற்புதமாய்க் குணமடைந்தன! (‘என்றும் பெருகும் விசுவாசம்’ என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது).

அருமை வாசகரே, நம்முடைய தேவன் எப்படிப்பட்டவர்? அவர் . . .

‘இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்தவர்!’ (2 கொ. 4:6).

‘சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவர்’ (யாத். 14:29).

‘யோர்தான் நதியை இரண்டு குவியலாக நிற்கும்படிச் செய்தவர்’ (யோசு. 3:16).

‘எரிகோ நகரத்தின் மதிலை விழச் செய்தவர்’ (யோசு. 6:20).

‘சூரியனையும், சந்திரனையும் நடுவானத்தில் நிறுத்தியவர்’ (யோசு. 10:13).

‘காற்றையும் கடலையும் அதட்டியவர்’ (மா. 4:39).

‘ஐந்து அப்பங்கள்கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்தவர்’ (மத். 14:19–21).

ஆம், நம் தேவன் அதிசயங்களைச் செய்கிறவர். ஜெப நேரத்தில் அவற்றை நினைவுகூர்ந்து, தேவனுக்கு ஸ்தோத்திரத்தைச் செலுத்துவீராக. அப்பொழுது அவருடைய வல்லமை நிறைந்த பிரசன்னம் உம்மை முற்றிலும் மூடிவிடும். இந்த அனுபவத்தோடு பக்தன் சவரிராயன் ஏசுதாசன் அவர்கள் பின்வருமாறு பாடினார்:

‘எத்தனை நாவால் துதிப்பேன்!—என்
கர்த்தா உன் கருணையைப் பாடிப் புகழ்ந்து
எத்தனை நாவால் துதிப்பேன்!
நினைக்க நினைக்க எந்தன் நெஞ்சமெல்லாம் உருகும்

நினைவில் சொல் மாலையால் சூட்டி மகிழும்
எத்தனை நாவால் துதிப்பேன்!'

2. 'என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி . . . அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே' (சங். 103:2).

அடுத்து, கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் செய்துள்ள நன்மைகளை நாம் நினைவுகூர்தல் அவசியமாகும். பெரும்பாலும் நம் தேவைகளையே நினைத்துக்கொண்டு, தேவன் நமக்குள் செய்துள்ள நன்மைகளை அறவே மறந்துவிடுகிறவர்களாயிருக்கின்றோம். மெய்யாகவே நாம் தேவனுடைய கரத்திலிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகள் கடற்கரை மணலையும், விண்மீன்களையும்விட ஏராளம்! ஏராளம்!! தேவனருளிய நன்மைகளை நாம் தியானிக்கத் தியானிக்க, தேவன்மீதுள்ள துவேஷமும் வெறுப்புணர்ச்சியும், முறுமுறுக்கும் தன்மையும் நம்மைவிட்டு நீங்கிவிடும். அவர்மேல் மெய்யன்பு பிறக்கும்.

'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக' (மா. 12:30) என்ற தேவ கட்டளையை நாம் நிறைவேற்றுபவர்களாயிருப்போம். தேவனும் நம்மேல் அன்புகூருகின்றார். அவருடைய சமுகம் நாமிருக்கும் இடத்தை நிரப்புகின்றது. ஜெப நேரம் ஆனந்தமான நேரமாக மாறுகின்றது. '. . . ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார்' (யோ. 14:23).

அமெரிக்காவில் இறை பக்திமிக்க ஒரு செல்வந்தர் இருந்தார். ஒருநாள் அவர் சென்றுகொண்டிருந்த கார் விபத்துக்குள்ளாகியதால் அவர் படுகாயமடைந்தார். மருத்துவ மனையில் தாங்கொணா வேதனையோடு அவர் படுத்திருந்தபொழுதும் அவர் சிறிதும் முறுமுறுக்கவில்லை. 'என் இரட்சகர் இயேசுகிறிஸ்து பட்ட பாடுகள், வேதனைகளைவிட நான் படும் இந்த வேதனை அதிகமல்ல. ஆகவே, நான் ஏன் முறுமுறுக்கவேண்டும்?' என்று சொல்லி அவர் மகிழ்ச்சியுடன்

காணப்பட்டார். பிற்காலத்தில் தேவன் இன்னும் கூடுதலாக அவரை ஆசீர்வதித்தார். 'கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்' (நீதி. 10:22).

அருமை நண்பரே, தன் ஏழு குமாரரையும் மூன்று குமாரத்திகளையும், தனக்குண்டான யாவற்றையும் இழந்த காலத்தும், 'கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்!' என்று துதித்துப் பாடிய யோபுவைக் கர்த்தர் இரண்டத்தனையாய் ஆசீர்வதிக்கவில்லையா (யோபு 1:21; 42:10,12)? காரணமில்லாமல் அநேக அடிகள் அடிக்கப்பட்டு, சிறைச்சாலையிலே கால்கள் தொழு மரத்தில் மாட்டப்பட்ட நிலையில் நடு ஜாமத்திலே தேவனைத் துதித்துப் பாடிய பவுலையும் சீலாவையும் தேவன் விரைந்து வந்து விடுவிக்கவில்லையோ (அப். 16:23–26)? நன்றியால் நிறைந்து தேவனைத் துதித்துப் பாடும் உனக்கும் அவர் விடுதலையருள்வார்.

'எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்
கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்
ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்.'

3. 'அல்லேலூயா, கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது' (சங். 106:1; 136:2). 'அவர் கிருபை என்றுமுள்ளது.' எவ்வளவு அருமையான வாக்கு! ஆம், தேவனுடைய கிருபை உமக்கு இன்றும், வரப்போகும் ஆண்டுகளிலும் உள்ளது! 'அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை' (புல. 3:22).

தேவனுடைய இனிமையான சமுகத்தில் நீர் ஜெபத்தில் ஆழ்ந்திருக்கும்போது, அவருடைய கிருபை இன்றும் உமக்குக் கிடைக்கப்போகிறதென்பதை நினைத்து அவருக்குத் துதி செலுத்துவீராக. 'தாவீது போன இடத்திலெல்லாம் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்' (2 சாமு. 8:6,14) என்று வேதம் சொல்கிறது. அதற்குக் காரணம் என்ன? தாவீது கர்த்தருடைய கிருபை என்றுமுள்ளது என்று விசுவாசித்

தான். மேலும் அவன் இந்தப் பேருண்மையை நாள்தோறும் பாடித் தேவனை மகிமைப்படுத்திட நாலாயிரம் ஆட்களை ஏற்படுத்தினுன் (1 நாளா. 23:5). அவனுடைய மகன் சாலமோனும் அவ்வாறே தான் கட்டின புதிய தேவாலயத்திலே தேவனைத் துதிப்பதற்குப் பாடகர்களை நியமித்தான். அந்தப் பாடகர்கள், 'கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது' என்று அவரை ஸ்தோத்திரிக்கையில் 'கர்த்தருடைய மகிமை தேவாலயத்தை நிரப்பிற்று' என்று 2 நாளாகமம் 5:13,14ல் வாசிக்கின்ரும்.

மேலும் தேவனுக்குப் பயந்து நடந்த யோசபாத் என்ற அரசனை எதிர்க்கப் பல பகையரசர்கள் தங்கள் சேனைகளோடு திரண்டு வந்தபொழுது, யோசபாத் பயந்துபோய்க் கர்த்தரைத் தேடினுன். யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான். தேவனுடைய சகாயத்திற்காகக் கெஞ்சினுன். அப்பொழுது கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியின்மூலம் அவனுக்கு உத்தரவு அருளினர். அவருடைய தீர்க்கதரிசனத்திற்கு இணங்க, யோசபாத் 'ஜனத்தோடே ஆலோசனைபண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தை துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னுக நடந்துபோய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளதென்று கர்த்தரைப் பாடவும் பாடகரை நிறுத்தினுன்' (2 நாளா. 20:21). முடிவென்ன? அவனுக்கு விரோதமாக வந்த திரளான சேனைகள் அத்தனையும் ஒரு நொடியில் முறியடிக்கத் தேவன் கிருபை செய்தார். தேவன் வேதாகமத்தில் வாக்களித்திருக்கும் நன்மைகளை நம்பி, அவரைத் துதித்துப் பாடுவாயானுல் அங்ஙனமே உனக்கும் வாழ்க்கையில் வெற்றியை அருளிடுவார்!

'நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி, ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்' (சங். 50:14,15) என்று அன்புள்ள கர்த்தர் வாக்கருளியிருக்கிருர். அது ஒருபோதும் பொய்யாகாது.

ஒரு தேசத்தின் தலைமையமைச்சர் ஒருவர் பெரிய நிலக்கரிச் சுரங்கம் ஒன்றினைப் பார்வையிடச் சென்ருர். அப்பொழுது

அந் நிறுவனத்தின் தலைமையதிகாரி தன் கீழ் பணியாற்றும் ஏனைய அதிகாரிகளை ஒவ்வொருவராக அவருக்கு அறிமுகஞ் செய்துவந்தார். அவர்கள் குறிப்பிட்ட ஓர் இளநிலை அதிகாரியின் பக்கத்தில் வந்தபொழுது, தலைமையமைச்சர் இளநிலை அதிகாரியைப் பார்த்து, 'என்ன? நீர் இன்னுமா இந்தக் கீழ்ப் பதவியிலிருக்கிறீர்?' என்று வினவிக்கொண்டே தலைமையதிகாரிமீது பொருளார்ந்த கண்ணேட்டம் ஒன்றைச் செலுத்தினர். தலைமையமைச்சர் வந்துபோன சில தினங்களுக்குள் அந்த இளநிலை அதிகாரி பல படிகள் மேலே பதவியுயர்வு கொடுக்கப் பெற்ருர். இதற்குக் காரணமென்ன? நாட்டின் தலைமையமைச்சர் பார்வையில் அடங்கியிருந்த கட்டளைதான்! 'என் தயவைப்பெற்றிருக்கும் இந்த இளநிலை அதிகாரியை உடனே மேல் பதவிக்கு உயர்த்துவது உன் கடமையென்றுணர்க' என்பதே தலைமையமைச்சரின் குறிப்புணர்த்திய கட்டளை.

அருமை நண்பரே! நிலையில்லா ஒரு தலைமையமைச்சரின் கிருபை (தயவு) இவ்வாறு செய்யக் கூடுமானுல், 'நித்தியானந்தமுள்ள ஏக சக்ராதிபதியும், இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய . . .' (1 தீமோ. 6:15) இயேசுகிறிஸ்துவின் கிருபை உமக்குக் கிடைத்துவிட்டால் அது எத்துணை பெரும் பேறு! ஜெபத்தில் முற்றும் ஆழ்ந்திடும்போது, அவர் கிருபை உமக்குக் கிடைக்கப்போகிறது என்று நம்பி, அந்த எதிர்பார்த்தலோடு கர்த்தரை ஸ்தோத்திரிப்பீராக. அப்பொழுது தேவன் மகிழ்வார். நிச்சயமாய் உமக்கு அருள் பாலிப்பார்.

ஆம், தேவன் துதிகளின் மத்தியில் வாசம்பண்ணுகின்ருர். முன் கூறியவாறு மூன்று விதங்களில் தேவனைத் துதித்துப் புகழ்வீரானுல் அவருடைய உள்ளம் மகிழும். அவருடைய சமுகம் உம்மைச் சூழும். தேவன் உம் ஜெபத்தைக் கேட்பார். ஜெப வேளை உமக்கு இன்பமும் ஆசீர்வாதமுமாயிருக்கும். 'கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது' என்று இப்பொழுது துதி பாடத் தொடங்குவீராக!

4

'உன் இருதயத்தை ஊற்றிவிடு!'

'கஷ்ட நஷ்டம் உண்டானாலும்
இயேசு வண்டை சேருவோம்,
மோசம் நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபம் காட்டுவோம்;
நீக்குவாரே நெஞ்சின் நோவை
பலவீனம் தாங்குவார்
நீக்குவாரே மனச் சோர்பை
தீய குணம் மாற்றுவார்.' (பாமாலை 376)

தேவனுடைய சமுகத்தில் நாம் லயித்துவிட்ட பிறகு நம்முடைய கோரிக்கைகளை எவ்வாறு அவரிடம் சமர்ப்பிப்பது, என்னென்ன காரியங்களைக் குறித்து வேண்டிக்கொள்வது என்று நம்மிற் பலர் யோசிக்கலாம். பிள்ளை தந்தையிடம் ஏதாவது கேட்பதற்கு ஒருபோதும் தயக்கமடைவதில்லை! தனக்கு வேண்டியவற்றையெல்லாம் உரிமையோடு ஒளிவு மறைவின்றித் தந்தையிடம் கேட்பது இயற்கை.

நான் அரபு நாடுகளுக்கு ஊழிய சம்பந்தமாக ஒரு சமயம் சென்றிருந்தபொழுது, இந்தியாவிலுள்ள ஒரு சிறுவன் எனக்கொரு கடிதம் எழுதியிருந்தான். 'மாமா, நீங்கள் இந்தியா திரும்பும்பொழுது எனக்கு ஓர் ஒட்டகம் வாங்கிக்கொண்டு வாருங்கள்' என்று அவன் கேட்டிருந்தான். ஒட்டகத்தை நான் விமானத்தில் எளிதாக ஏற்றிக்கொண்டு வரமுடியுமா என்றோ, கொண்டுவந்தாலும் அவன் அதை வைத்துக்கொண்டு என்ன செய்வான் என்றோ சிறிதும் கருதாமல், கள்ளங் கபடில்லாமல் அந்தச் சிறுவன் எழுதியமை எனக்குக்

கோபத்தை உண்டாக்கியதோ? இல்லை! இல்லை!! நகைப்பையே விளைவித்தது! அருமை நண்பரே! இயேசுகிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தால் பாவக் கறைகள் நீங்கிக் கழுவப்பட்டுத் தூய்மை பெறுவோர் யாவரும் தேவாதி தேவனுடைய சொந்தப் பிள்ளைகளாகிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது. எனவேதான் நம் அருமை நாதரும் தாம் உயிரோடெழுந்த பிறகு, பரலோகம் செல்வதற்கு முன்னர், 'நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் ஏறிப் போகிறேன்' என்று கூறினார் (யோ. 20:17). ஆ தேவன் நம்முடைய பரம தந்தை! நாம் அவரு பிள்ளைகளாயிருக்கும்பொழுது, அவருடைய செல்வம் அனைத்திற்கும் சுதந்தரவாளிகள் ஆகின்றோம். எனவே நாம் உரிமையோடு தேவனிடம் நம் வேண்டுதல்களைத் தெரிவிக்கும்பொழுது அவருடைய உள்ளம் பூரிப்படைகிறது (கலா. 3:26; 4:6,7; ரோ. 8:17; மத். 7:9—11).

'ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்பொழுது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?' (மத். 7:11) என்ற தேவனுடைய வார்த்தை நமக்கு எவ்வளவு ஆறுதலும் தேறுதலுமாயிருக்கிறது! ஆகவே நம்முடைய பரம தந்தையிடம் நம் இருதயத்தைத் திறந்து, ஒளிவு மறைவின்றித் தயங்காமல் நம்முடைய தேவைகளைச் சொல்வோமாக. சில சமயங்களில் நமக்குள் சில ஐயங்கள் எழுகின்றன:

'தேவன் என் எல்லாத் தேவைகளையும் சந்திப்பாரா?'
'பரிசுத்தமுள்ள தேவன் என் பிதற்றுதல்களைக் கேட்டுச் சினமடைவாரோ?'

இவ்வாறு நாம் யோசிக்கக்கூடும். இது குறித்துக் கர்த்தருடைய வேதம் கூறுவதாவது:

'அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்' (1 பே. 5:7).

இதே சத்தியத்தை சங்கீதம் 55:22; பிலிப்பியர் 4:6 ஆகிய வசனங்களிலும் காண்கிறோம்.

'வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்திற்கு வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத். 11:28) என்ற இயேசுவின் வாக்கிற்கிணங்க நம்முடைய பாவங்கள் அனைத்தையும் அவர் பாதத்தில் வைத்துவிடல் நமது மாபெரும் சிலாக்கியமாம். பக்தர்களின் அனுபவமும் அஃதே! தாவீது அரசனும் ஜெபத்தைக் குறித்துத் தன் அனுபவத்திலிருந்து நமக்குக் கூறும் ஆலோசனைகளைப் பாருங்கள்:

'அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்; அவருக்கு முன்பாக என் நெஞ்சத்தை அறிக்கையிடுகிறேன்' (சங். 142:2).

'ஜனங்களே, எக் காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை அறிக்கையிடுங்கள்' (சங். 62:8).

எவ்வளவு அரிய அனுபவம்! அரிய ஆலோசனை! அவ்வாறே எரேமியா தீர்க்கதரிசியும் 'ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு' (புல. 2:19) என்று அறிவுறுத்தியுள்ளார்.

அன்னாள் என்ற பெண் திலகம் தேவனோடு போராடி ஊக்கமுடன் ஜெபித்துப் பிள்ளைப்பேறு பெற்றவள். அந்தப் பிள்ளையே பிற்காலத்தில் சாமுவேல் எனும் தீர்க்கதரிசியாய்த் தேவனுக்குப் பணிவிடை செய்தான். அவள் பிள்ளையில்லாக் குறையைத் தேவனிடம் சொல்லிவிட்டு, 'நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்' என்று தன் அனுபவத்தைப் பகர்ந்தாள் (1 சாமு. 1:15).

சில வேளைகளில் ஆண்டவரிடம் நாம் ஜெபிக்கும்போது, நம் தேவைக் குறைவுகள் அனைத்தையும் அவரிடம் சமர்ப்பிப்பதில்லை. நம்முடைய சஞ்சலங்களையும், தேவைகளையும் சாதுரியமாகத் திரித்தும், அரைகுறையாகவும் ஆண்டவரிடம் முறையிடுகின்றோம். வழக்கறிஞரிடமோ வைத்தியரிடமோ செல்பவர்கள் உண்மையை மறைத்தல் அறிவுடைமை

யாகுமோ? கொலையாளி ஒருவன் சிறந்த வழக்கறிஞர் ஒருவரை அமர்த்திக்கொள்கிறான். ஆனால் அவரிடம் தான் கொலை செய்யவேயில்லை என்று பொய் சொன்னால், வழக்கறிஞர் அவன் செய்த குற்றத்திற்காக எவ்வாறு சாதுரியமாய் வாதிடமுடியும்? சிகிச்சைக்காக வைத்தியரிடம் சென்றால், நமக்கு வந்த வியாதியையும், அதற்குக் காரணமான நம்முடைய தவறான செய்கைகளையும் அவரிடம் ஒளிவு மறைவின்றி எடுத்துரைப்பது அவசியமன்றோ? அப்படியானால் தானே அவர் நம் வியாதிக்கேற்ற மருந்து கொடுக்கமுடியும்? பரம வைத்தியராகிய இயேசுகிறிஸ்துவின் கண்கள் எதையும் ஊடுருவ வல்ல கண்கள். அவ்வித கண்களுக்கு முன்னர் ஒன்றும் மறைவாயிருக்கமுடியாது. ஆகவே, அவரிடம் நீர் எதையும் மறைத்தல் சரியாகுமோ? அவ்வாறு மறைத்துக் கொண்டு, அவர் உம் ஜெபங்களுக்குப் பதிலளித்து, உம் தேவைகளைச் சந்திப்பார் என்று நீர் எதிர்பார்த்தல் கூடுமோ? இல்லை. ஆகவே தாவீதைப்போல், 51ம் சங்கீதத்தில் அவன் பாவ அறிக்கை செய்ததுபோல, தேவனுடைய இரக்கங்களையும், கிருபைகளையும் முற்றுமாய் நம்பிக் கண்ணீரோடு நும் குறைவுகளையும் தேவைகளையும் தேவ சமுகத்தில் ஊற்றிவிடுவீராக.

அப்பொழுது 'உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாய் எண்ணாமலும் அருவருக்காமலும் தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில், அவனைக் கேட்டருளினார்' (சங். 22:24) என்று சாட்சி பகரக்கூடியவராயிருப்பீர்!

5

‘தடைகளை நீக்கிப்போடுகிறவர்... நடந்துபோகிறார்’

‘குறை யாவும் நீக்கிட, நாதா நீர் சம்பூரணர்;
திக்கற்றோரைத் தாங்கிட, நீரே மா தயாபரர்;
நான் அசுத்த பாவிதான், நீரோ தூயர் தூயரே;
நான் அநீதி கேடுள்ளோன், நீர் நிறைந்த நித்யரே.’
(பாமாலை 370)

சில சமயங்களில். ‘ஐயோ, நான் தேவனுடைய சமுகத்தில் எவ்வளவோ கண்ணீர்விட்டு ஜெபித்தும் என் ஜெபம் கேட்கப் படவில்லையே!’ என்று நாம் புலம்பக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. தேவன் நம் ஜெபத்தைக் கேளாதவர் போலிருக்கப் பல காரணங்கள் வேதாகமத்தில் சொல்லப்பட் டுள்ளன. அவற்றுள் சிலவற்றை இவண் காண்போம்:

(அ) இச்சைகள்

‘நீங்கள் விண்ணப்பம்பண்ணியும் உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று, தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்’ (யாக். 4:3).

ஆம்! நமக்குத் தகுந்தவையல்லாத ஆசைகளைத் தேவன் நிறைவேற்றவேமாட்டார். நம் வாழ்க்கைக்கு இன்றியமையாதவற்றையே தாம் அருள்வதாகத் தேவன் வாக்களித் திருக்கிறாரேயன்றி, வாழ்க்கையில் ஆடம்பரத்துக்கும், பகட்டுக்கும், பயனற்றவற்றுக்குமுரிய காரியங்களை அருள்வ

தாக அவர் வாக்களிக்கவில்லை (மத். 6:33; பிலி. 4:19; 1 யோ. 5:14).

‘ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகள் அல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்’ (1 யோ. 2:16,17).

‘ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும், அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.’ ‘பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்’ (1 தீமோ. 6:9,10).

மேற்கண்ட வேத வசனங்கள் ‘இச்சை’ எவ்வளவு கொடியதென்று விளக்குகின்றன. ஆகவே இச்சைகளை நிறைவேற்றும்படி நாம் வேண்டிக்கொள்ளும் பிரார்த்தனைகளை அன்புள்ள தேவன் அங்கீகரிக்கமாட்டார்!

அலுவலகம் ஒன்றில் பண மோசடி செய்ததாக அதிகாரி ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். இறுதியில் அவர் பண மோசடி செய்ததற்கு மூலகாரணம் அவரது மனைவிதான் என்பது வெளியாயிற்று. தன் கணவனின் வருவாய் இவ்வளவு என்று கருதாமல், கடையிற்காணும் நகைகளையும், புடவைகளையும் மற்றும் பொருட்களையும் புதிது புதிதாக வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று அவள் நச்சரிப்பாள். மனைவியின் இச்சையை நிறைவேற்றுவதற்குத் தன் சம்பளம் போதாமையால், கணவன் தன் அலுவலகத்தில் பணத்தைக் கையாடல் செய்ய நேரிட்டது. ஆகவே, அவர் வேலை போயிற்று. குடும்பம் முழுவதும் பசியால் வாடும் பரிதாப நிலைமை வந்தது. தம்மை நேசிப்பவர்க்கும், தம்மால் நேசிக்கப்படுவோர்க்கும் இத்தகைய அவல நிலைமை வரக்கூடாது என்பதற்காகவே ஆடம்பர வாழ்க்கையை விரும்பிக் கேட்கும் ஜெபங்களுக்கு நம் அன்புள்ள பரம தகப்பன் பதிலளிப்பதில்லை.

(ஆ) அக்கிரம சிந்தை

'என் இருதயத்தில் அக்கிரம சிந்தைகொண்டிருந்தேனுனல் ஆண்டவர் எனக்குச் செவிகொடார்' (சங். 66:18).

நாம் நம்முடைய தேவைகளுக்கான ஜெபங்களை கிருபாசனத்தின்முன் ஏறெடுக்குமுன்னர் நம் நண்பர்கள், உற்றூர் உறவினருக்கும் நமக்குமிடையே உறவு சமாதானமுள்ளதாயிருக்கிறதா என்றும், பிறரது குற்றங்களை நாம் உளமார மன்னித்திருக்கிறேமா என்றும் நம்மை நாமே தற்பரிசோதனை செய்தறிதல் அவசியம். இது தேவனுடைய கட்டளை. அதற்குக் கீழ்ப்படியாமல், மன்னிக்கும் சிந்தையின்றி, வைராக்கியத்தையும், பகைமையையும், உள்ளத்தில் பேணி வைக்கும்போது, தேவனும் நம் பாவக் குற்றங்களை மன்னியாதிருக்கிறுர் (மத். 5:23,24; 6:14,15; 18:35; கொலோ. 3:13; எபே. 4:32; மா. 11:25,26; 1 யோ. 3:21,22; யாக். 3:16; நீதி. 19:11).

பகைமை பேணிய உள்ளத்தோடு ஒருவர் ஏறெடுக்கும் ஜெபத்தைத் தேவன் ஏற்பதில்லை. அத்தகைய ஜெபம் தேவனுடைய சந்நிதியை எட்டுவதில்லை. பிறர் கேடு நினைத்தலும், செற்றம் பேணலும் நமது ஜெபங்கள் தேவனைச் சேராதபடி இடமளிக்கும் தடைகளாம்.

ஒரு கிறிஸ்தவ நிறுவனத்திலிருந்து ஊழியர் ஒருவர் விலகினுர். அதன்பின் சின்னுட்களுக்குப் பின்னர் அவர் வறுமை, பசி, பட்டினி, நிந்தை, பரிகாசம், கண்ணீர் இவற்றைச் சகிக்க வேண்டியதிருந்தது. பொறுமையாய்க் காலங்கழித்துப் பின் அதே ஊரில் அவர் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய ஆரம்பித்தார். இதனை அவர் முந்திப் பணியாற்றிய நிறுவனத்தாரால் பொறுக்கமுடியவில்லை. அவர்களுள் அழுக்காறுமிக்க சிலர் ஒருங்குகூடி ஆண்டவர் அந்தப் போதகருடைய ஊழியத்தை ஆசீர்வதிக்கக் கூடாதென்று உபவாசம்பண்ணி ஊக்கமாய் ஜெபித்துவந்தனர். தவருன நோக்கத்துடன் ஏறெடுக்கப்பட்ட இந்த ஜெபத்தைப் பரிசுத்தமுள்ள தேவன் கேட்பாரோ? சில தினங்களுக்குள் அவ்வாறு ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தவர்களுள் பலர் கொடிய

இரத்த பேதியால் வருந்தினர்! சிலர் மடிந்தனர்! அந்த ஏழைப் போதகரின் ஊழியமோ சுடர்விட்டு ஒளி வீசியது! தேவன்தாமே இத்தகைய அக்கிரம சிந்தை நம்முடைய இருதயத்தில் குடிகொள்ளாதிருக்கத் துணைபுரிவாராக!

(இ) அவிசுவாசம்

பொல்லாத அசுத்த ஆவி ஒன்றினுல் அலைக்கழிக்கப்பட்ட சிறுவன் ஒருவனை அவனுடைய தகப்பன் இயேசுகிறிஸ்துவின் சீடர்களிடம் கொண்டுவந்தான். அசுத்த ஆவியைத் துரத்திட அவர்கள் எவ்வளவோ முயன்றும் அவர்களால் இயலவில்லை. சீடர்கள் இதற்குக் காரணத்தை இயேசுவிடம் கேட்டபொழுது, 'உங்கள் அவிசுவாசத்தினுல்தான்...' என்று இயேசு கூறினுர் (மத். 17:20). மேலும் அந்தச் சிறுவனின் தகப்பனும் . . . 'ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சொன்னுன்' என்று பார்க்கிறேம் (மா. 9:24). அதன் பின்னரே இயேசு சிறுவனைக் குணமாக்கினுர். இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளவேண்டியது யாதெனில், சீடர்களிடத்திலும், தகப்பனிடத்திலும் காணப்பட்ட 'அவிசுவாசமே' அந்தத் தகப்பனுடைய வேண்டுகோள் நிறைவேறிடத் தடையாயிருந்தது என்பதே.

'அவிசுவாசத்தினுலேயே எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் தேவனுல் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்த பாலும் தேனும் ஓடுகிற கானுன் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாமற்போனுர்கள்' (எபி. 3:19). விசுவாசமின்றிக் கேட்கும் வசனமும் பயனற்றதாகவே போகும் என்று வேதம் விளம்புகிறது (எபி. 4:2). 'விசுவாசத்தினுலே வராத யாவும் பாவமே' (ரோ. 14:23) என்ற கூற்று நம்மை நடுங்கச் செய்கிறதன்றே! தேவன்தாமே 'அவிசுவாசம்' எனும் கொடிய விஷத்தினின்று நம்மைக் காப்பாராக!

'ஆதலால் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்கிறேன்' (மா. 11:24). இவ்வாறு அன்பர் இயேசு உறுதியளிக்கின்றுர். இவ்வாக்கு,

நம் உள்ளத்தில் விசுவாசத்தைப் பெருகச் செய்திடும் இனிய வாக்காயிருக்கிறது!

சிறிது காலத்திற்கு முன்னர் அயல்நாடு ஒன்றில் நற்செய்தியுரையாற்றிக்கொண்டிருந்தேன். சீனப் பெண் ஒருத்தி காது கேளாத தன் புதல்வனைக் கூட்டத்திற்கு அழைத்துக்கொண்டு வந்திருந்தாள். ஜெபம் வேண்டி முன் குழுமியோர் வரிசையில் அவளே தன் மகனோடு முதல் நபராக நின்றுகொண்டிருந்தாள். சிறுவனுடைய காதில் 'ஓசை கேட்கும் கருவி' (Hearing aid) ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. தாயினுடைய முகத்தில் ஆழமான விசுவாசம் பளிச்சிட்டது. 'என் குழந்தையின் காது கேட்கும்படித் தயவுசெய்து ஜெபம்பண்ணுங்கள்' என்று வாஞ்சையோடு என்னைக் கேட்டுக்கொண்டாள். நூற்றுக்கணக்கானோர் ஜெபிப்பதற்காகக் காத்துக்கொண்டிருந்ததால் ஒரே நிமிடம் அவனைத் தொட்டு, 'கர்த்தாவே, இவனைக் குணமாக்கும்' என்று பிரார்த்தித்துவிட்டு வரிசையிலுள்ள ஏனையோருக்காக ஜெபிக்கப் புறப்பட்டேன். அந்த அம்மாளோ என் அருகே தன் மைந்தனை நிறுத்தி, விசுவாசத்தோடு ஓசை கேட்கும் கருவியை அவன் காதிலிருந்து அகற்றிவிட்டு அவனோடு சாதாரணமாகப் பேசினாள். இளைஞனும் நன்றாய்க் காதுகேட்டதினால் சாதாரணமாக உரையாடினான்! தாயாரின் உள்ளம் ஆனந்தத்தால் பரவசமடைந்தது! அவனைத் தூக்கி அரவணைத்துக்கொண்டு தேவனுக்குத் துதி செலுத்தியவளாக யாவரும் வியந்திடப் பெருமிதத்தோடு நடந்து சென்றாள்! இதுதான் உத்தம விசுவாசம்!

அன்பான வாசகரே! உம்முடைய ஜெபங்கள் கேட்கப்படாதபடி இடையூறாகயிருக்கும் மேற்கூறிய மூன்றுவித தடைகளில் யாதொன்றும் நம்மிடம் இராதபடிக்குத் தேவன் அனுக்கிரகம் செய்வாராக! 'தடைகளை நீக்கிப்போடுகிறவர், அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்' (மீகா 2:13) என்ற வாக்குப்படி எல்லாத் தடைகளையும் அகற்றுவாராக! உம்முடைய துன்ப துயரங்கள் யாவற்றையும் தைரியமாக விசுவாசத்தோடு கர்த்தருடைய சமுகத்தில் ஊற்றுவீராக! உம்முடைய விண்ணப்பங்களைக் கர்த்தர் கவனித்துக் கேட்டுப் பதிலளிப்பார்!!

6

'எங்களுடைய போராயுதங்கள் . . . தேவ பலமுள்ளவைகள்'

'பக்தியாய் ஜெபம் பண்ணவே சுத்தமாய்த் தெரியாதையா!
புத்தியோடுமைப் போற்றநல் சித்தமீந்திடும் இயேசுவே!
பாவ பாதையை விட்டுநான் ஜீவ பாதையில் சேர, நல்
ஆவி தந்தெனை ஆட்கொளும் தேவதேவ குமாரனே.'

(கீர்த்தனை 218)

ஜெபத்தைக் குறித்துப் பல சமயங்களில் நாம் கருதுவது யாதெனில், ஏதோ தனிமையாக, அமைதியாக, பக்தி நிலையில் மூழ்கியிருத்தல் ஜெபமாகும் என்பது! ஆனால் அதே சமயம் அது கடுமையான காரியமுமாயிருக்கிறது. பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் எபேசியருக்கு எழுதும்போது, 'அந்தகார லோகாதிபதிகளோடும், பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு' என்றார். ஆகவே அவைகளை எதிர்க்க ஆயத்தமாகும்படி அவர்கள் தொடுக்கவும் எடுக்கவும் வேண்டிய பல ஆயுதங்களைக் குறித்துக் கூறுகின்றார். இறுதியாக 'எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி . . . விழித்துக்கொண்டிருங்கள்' என்று அறிவுறுத்தியுள்ளார் (எபே. 6:18).

'எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கு ஏற்றவைகளாகாமல் அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பல

முள்ளவைகளாயிருக்கிறது' (2 கொ. 10:4) என்று கூறினர். மேற்கண்ட வசனத்தில் சொல்லப்பட்ட போராயுதங்கள் எவையெவை என்பதையும், ஜெபத்தில் நாம் அவைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்றும் சிறிது தியானிப்போம்.

1. இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமம்!

'இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்' என்று வேதம் சொல்கிறது (பிலி. 2:10).

'என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்' என்று தேவ குமாரனாகிய இயேசுவும் வாக்களித்துச் சென்றார் (யோ. 14:14).

'அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்' (யோ. 1:12) என்ற திருமறை வாக்கின்படி, இயேசுகிறிஸ்துவுடைய பெயரின்மேல் நம்பிக்கை வைக்கின்ற யாரையும் தேவன் தமது புதல்வராகவே ஏற்றுக்கொள்கிறார். இத்தகைய விசுவாசிகளுடைய பாவங்களை மன்னிக்கிறார்; அவற்றை அறவே மறக்கிறார். இவை மட்டுமின்றி, அவர்கள் தம்மை, 'அப்பா, பிதாவே' என்று உரிமையோடு அழைத்துத் தங்களுடைய தேவைகளை அவரிடம் சொல்லும்போது, அவர்கள் ஜெபங்களைக் கேட்டு அவர்கள் விரும்புவன யாவற்றையும் தருவதாகவும் உறுதியளிக்கிறார்! இயேசுகிறிஸ்து நாமத்திலே உள்ள மகத்துவத்தின் இரகசியம் என்ன?

பல்லாண்டுகளுக்கு முன்னர் நீக்ரோ மக்களின் அடிமைத்தனை போக்கிய அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மக்கள் தலைவர் ஆபிரகாம் லிங்கன் அவர்கள் வெறியன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய சடல ஊர்வலம் போய்க் கொண்டிருந்தபொழுது, நீக்ரோ பெண்மணி ஒருத்தி தன் குழந்தைக்கு ஆபிரகாம் லிங்கனின் சடலத்தைச் சுட்டிக் காட்டி, 'அருமை மகளே, இந்தப் பெரிய மனிதரை நன்றாய்ப்

பார்த்துக்கொள். அவர் உனக்கு விடுதலை வாழ்வளிக்கத் தம் உயிரைத் தியாகம் செய்திருக்கிறார். ஆகவே, இவர் பெயரை ஒருபோதும் மறவாதே' என்று சொன்னளாம்.

அன்பான வாசகரே, அருமை இரட்சகர் இயேசுகிறிஸ்துவும் உலகிலுள்ள ஒவ்வொருவரையும் பாவங்களிலிருந்து விடுதலை செய்வதற்காகத் தம்மையே சிலுவையில் அர்ப்பணித்தார். ஆகவே அவருடைய பெயரைச் சொல்லி, நாம் பிரார்த்திக்கும்பொழுது விண்ணுலகும் மண்ணுலகும் கீழுலகும் அசைக்கப் படுகின்றன. கர்த்தாதி கர்த்தரிடமிருந்து நம் ஜெபங்களுக்குப் பதிலும் கிடைக்கிறது!

2. தேவனுடைய வாக்குத்தத்தங்கள்!

'தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ''ஆம்'' என்றும், அவருக்குள் ''ஆமென்'' என்றும் இருக்கிறதே' (2 கொ. 1:20).

'பொய் சொல்ல தேவன் ஒரு மனிதனல்ல; மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரோ (எண். 23:19)?'

உலகிலேயே மிகப் பெரிய ஒப்பற்ற ஆயுதம் தேவனுடைய வார்த்தையாகும்! அவருடைய வார்த்தை ஒருபோதும் மாறாதது! அது ஆற்றல் சான்றது! தேவன் தம் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தையினாலே வானத்தையும், பூமியையும், நட்சத்திரங்களையும், அண்ட சராசரங்களையும் படைத்தார் (எபி. 1:3; 11:3; சங். 33:6; 2 பே. 3:5). எல்லையற்ற பரம் பொருளின் வார்த்தையால் படைக்கப்பெற்றவை எவ்வளவு அழகாயிருக்கின்றன! 'அவர் சகலத்தையும் அதனதின் காலத்திலே நேர்த்தியாய்ச் செய்திருக்கிறார்' (பிர. 3:11) என்ற வேத வசனம் முற்றும் உண்மை! 'கடவுள் இல்லை' என்ற கொள்கையினனான யூரி காகரின் என்ற இரஷ்ய விண்வெளிக் கப்பல் விமானியுங்கூட, பல காவதம் மைல்கள் விண்ணிற் பறந்து சென்று, அங்கிருந்து கணக்கற்ற நட்சத்திரங்களைக் கண்ணுற்றபோது, 'ஆ! எத்துணை கண்ணுக்

கினிய காட்சி! உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் காட்சி!' என்று தன்னையுமறியாமல் வியப்புமீறக் கூறினான். அவ்வாறே முதன்முறையாக விண்வெளிக் கப்பலிலிருந்து இறங்கி, சந்திர மண்டலத்தில் காலடி வைத்த நீல் ஆர்ம்ஸ்ட்ராங்கும் ஆனந்தப் பரவசத்தில், 'ஆ! எத்துணை இனிய காட்சி; இறைவனின் இனிய மாட்சி!' என்று வியந்துரைத்தானும்.

சந்திரனையும், நட்சத்திரங்களையும் இவ்வளவு அழகாய்ப் படைத்தருளிய தேவனுடைய வார்த்தை, உமக்கு அளவற்ற நன்மைகளைச் செய்யும் என்பது வெகு நிச்சயமல்லவா?

'உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!' (சங். 31:19) என்ற தேவ வாக்கின்படி, சந்திரனையும் நட்சத்திரங்களையும் அழகுறப் படைத்த தேவன், உமக்கும் இணையில்லாத ஆசீர்வாதங்களைச் சேமித்து வைத்திருக்கிறார். அவைகளையெல்லாம் உமக்கு இலவசமாகத் தரப்போவதாகவும் வாக்கருளியிருக்கின்றார். ஆகவே, நீர் ஜெபிக்கும்போது தாம் அருளப்போவதாகத் தேவன் பரிசுத்த வேதாகமத்தில் வாக்குத்தத்தம்பண்ணியிருக்கும் ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் தைரியமாய் அவரிடம் வேண்டிக்கொள்வீராக. அப்பொழுது தாம் வாக்கருளினபடியே எல்லா நன்மைகளையும் உமக்கு அவர் அருளுவார்!

3. பரிசுத்த ஆவியானவர்!

'அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமல் இருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்' (ரோ. 8:26).

தேவன் நமக்கருளியுள்ள பொக்கிஷங்களுள் தலைசிறந்த பொக்கிஷம் பரிசுத்த ஆவியானவர் ஆவார்! 'இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்' (2 கொ. 4:7). துயரம் நிறைந்த உள்ளத்தோடு நாம் ஜெபத்தில் ஈடுபடுகிறோம். அப்பொழுது நாம் பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றிருந்தால், நமக்குள்ளே வாழும் அவர், பரலோகம் நமக்காகத் திறக்கும்படிச் செய்கிறார். தன்னைச் சூழப் பகைவர்கள் நின்று மூர்க்கமடைந்து, பல்லைக்கடித்து, நிந்தித்த காலத்தும் ஸ்தேவான், 'பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும் தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் காணவில்லையா (அப். 7:54,55)?'

இயேசுகிறிஸ்துவின் சுவிசேடத்தினிமித்தம் கைது செய்யப்பட்டுப் பத்மு தீவிற்கு அனுப்பப்பட்ட யோவானும் தேவ ஆவியினால் நிறைந்தபொழுது, பரலோக வாசல் திறந்திட, இனிய காட்சிகளை அதன் வாயிலாகக் காணும் பேறுபெற்றார் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (வெளி. 1:10; 4:1–3).

பரிசுத்த ஆவியானவரைக் குறித்து, 'கர்த்தரே ஆவியானவர், கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு' என்று 2 கொரிந்தியர் 3:17,18ல் கூறப்பட்டிருக்கிறது. ஆம்! ஒருவர் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்பொழுது, அவர் கர்த்தராகிய கிறிஸ்துவின் சமுகத்தால் நிரப்பப்படுகின்றார். அதன் பயனால் அவர் பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கிறிஸ்துவோடு ஜெபத்தில் பேசுவது சாத்தியமாகிறது. நண்பரே! பரிசுத்த ஆவியானவரின் நிறைவுஎனும் போராயுதத்தை நீர் பெற்றிருக்கிறீரா? அதனைப் பெறவில்லையென்றால் லூக்கா 11:9–13ல் சொல்லப்பட்டபடி ஆண்டவரிடம் ஆவலோடு கேட்டுப் பெற்றுக்கொள்வீராக! அப்பொழுது உமக்குள்ளிருக்கும் பரிசுத்த ஆவியானவர் கிருபாசனத்திற்குமுன் நீர் வரும்பொழுதெல்லாம் உமக்காய் வேண்டுதல் செய்வார் (ரோ. 8:26). பரலோகம் உமக்காகத் திறக்கும்படி அருள்புரிவார்!

சுவிசேட நற்செய்தி அறிவிக்கும் ஊழியர் ஒருவரை அறிவேன். அவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பினாலும், மனதுருக்கத்தினாலும் நிறைந்து, எண்ணற்ற மக்களின்

இன்னல்கள், பிணிகள் நீங்குவதற்காகப் போராடி ஜெபிப்பவர். அவருடைய ஊழியத்தில் தேவனுடைய ஆசீர்வாதம் காணப்படுவதின் இரகசியம் இதுதான். அவர் தம் ஊழியத்தில் தேவனுடைய வல்லமை விளங்கவேண்டுமென்று பல ஆண்டுகளாய் ஜெபித்துவந்தார். ஓரிரவு அவர் தம் குடும்ப ஜெபத்தில் ஈடுபட்டிருந்தபொழுது, முற்றிலும் எதிர்பாரா வண்ணம் தேவாவியானவர் அவர்மீது இறங்கினர். மூன்று மணி நேரம் அவர் தேவனுடைய ஆவியால் நிறைந்திருந்தார். இந்த அனுபவத்தின்மூலம் ரோமர் 5:5ல் சொல்லப்பட்டபடி இணையற்ற தேவ அன்பு அவரது உள்ளத்தை நிறைத்தது. இன்றும் அவருடைய ஊழியத்தின்மூலம் கிறிஸ்துவின் இணையற்ற அன்பும், வல்லமையும் உலகெங்கும் துயரத்திலும் துன்பத்திலும் வருந்தும் மக்கள்பால் பாய்ந்து செல்கின்றது.

நண்பரே! இந்த மூன்று அருமையான ஆயுதங்களும் உம் ஜெப வாழ்விற்கு இன்றியமையாதவைகளாகும். அப்பொழுது உம் ஜெப வாழ்க்கை தேவ வல்லமையும், தேவ சமுகமும், தேவ அன்பும் நிறைந்தவையாயிருக்கும். அன்று பவுலடிகள் கூறிய கீழ்க்கண்ட இன்ப வாக்கு உம் அனுபவமாக மாறுவதாக:

'எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது' (2 கொ. 10:4).

7

'பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்!'

'நாற்பது நாள் ராப் பகல்
வனவாசம் பண்ணினீர்;
நாற்பது நாள் ராப் பகல்
சோதிக்கப் பட்டும் வென்றீர்.
உம்மைப்போல நாங்களும்
லோகத்தை வெறுக்கவும்
உபவாசம் பண்ணவும்
ஜெபிக்கவும் கற்பியும்.'

ஏறக்குறைய 3000 வருடங்களுக்கு முன்பு யூதா தேசத்தை யோசபாத் என்னும் ஓர் அரசன் அரசாண்டு வந்தான். அவன் மிகுந்த தேவ பக்தியுடையவன். எனவே, தேசத்திலே எங்கும் தேவ ஆசீர்வாதமும் செழுமையும் காணப்பட்டது. அவனுக்கு ஒரு கொடிய சோதனை வந்தது. திடீரென அவனுடைய நாட்டைச் சுற்றிலுமிருந்த பல அரசர்கள் அவனுக்கு விரோதமாக சதிசெய்து அவன் தேசம் முழுவதையும் அழித்துவிடப் புறப்பட்டு வந்தனர். எண்ண முடியாத அளவிற்கு அவர்களுடைய இராணுவம் வீரர்களால் நிறைந்திருந்தது. எனினும், நல்லெண்ணம்கொண்ட ஒற்றர் சிலர் காற்றினும் வேகமாக விரைந்துவந்து யோசபாத்திற்கு இந்தத் துர்ச்செய்தியை அறிவித்தனர். ஒருவேளை அவர்கள் எண்ணியிருக்கலாம், யோசபாத் அரசன் எதிரிகள் தன்னைச் சூழ்ந்துகொள்ளுமுன்பதாக தனக்கு நண்பர்களாயிருந்த

மற்ற அரசர்களிடம் உதவி தேடிக்கொள்வதற்கு தங்கள் செய்தி உதவியாயிருக்குமென்று! ஆனுல், இந்தச் செய்தியைக் கேட்ட யோசபாத் செய்த காரியம் அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. யோசபாத் என்ன செய்தான் தெரியுமா? வேதம் சொல்லுவதைக் கேட்போம்.

'அப்பொழுது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிற தற்கு ஒருமுகப்பட்டு யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித் தான். அப்படியே யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந் தேடக் கூடினார்கள்; யூதாவிலுள்ள எல்லாப் பட்டணங்களிலு மிருந்து அவர்கள் கர்த்தரைத் தேட வந்தார்கள்' (2 நாளா. 20:3,4).

ஆம்! அவன் தன்னைப் போன்ற மனிதர்களாகிய மற்ற அரசர்களின் ஒத்தாசையைத் தேடிப் போகாமல், தேவாதி தேவனுடைய, சர்வ வல்லமையும் தன்னுட்கொண்ட இறைவ னுடைய சகாயத்தை உபவாச ஜெபம் மூலம் தேடினுன். தன்னேடுகூட பிரார்த்தனை செய்ய தன் தேசத்துக் குடிகள் அனைவரையுங்கூட கூட்டிக்கொண்டான். இச்செய்தி கேட்ட அவன் பகைஞர் நன்றுய் நகைத்திருக்கக்கூடும். 'நாற்றிசை யும் தூதுவர்களை அனுப்பி, வலிய படை ஒன்றை திரட்டு வதை விடுத்து, தன்னிடத்திலுள்ள இராணுவத்தினரை தட்டியெழுப்பி, எங்கணும் யுத்த முழக்கத்தை பரவச் செய்து, அன்னுரைப் போருக்கு ஆயத்தப்படுத்துவதை தவிர்த்து, கோழைகளைப்போல தலைவணங்கி, கண் கண்டிராத, காணக் கூடாத ஓர் இறைவன்முன் நிற்கச் செய்துவிட்டானுமே' என்று எள்ளி நகையாடியிருப்பர். 'யோசபாத் தன் மதியை இழந்துவிட்டானே' என்றுகூட சிலர் ஏளனம் செய்திருக்கக் கூடும். ஆனுல், பரலோகத்தின் தேவன் அவனுடைய அசை யாத, உறுதியான நம்பிக்கையைக் கண்டார். தம் தீர்க்கதரிசி ஒருவர் மூலம் தாம் அவனைக் கைவிடாமல் வெற்றி அளிப் பதாய் உறுதி கூறினுர்.

அடுத்த நாள் அதிகாலையில் போர்க்களத்திற்கு யோசபாத் தின் இராணுவம் சென்றபோது ஆச்சரியமான ஒரு காரியத் தைக் கண்டனர். அதற்கு முந்தின இரவு, தங்களுக்குள்ளே எழுந்த பிணக்கினுல் எதிரிகள் ஒருவரையொருவர் கொலை

செய்து தீர்த்திருந்தனர். யோசபாத்திற்கு போரிடவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. தன் விரோதிகளின் உடைமை களைக் கைப்பற்றித் தன் நாட்டிற்குத் தூக்கிச் செல்வது மட்டுமே, அவனுக்கும் அவனுடைய இராணுவத்தினருக்கும் 3 நாட்கள் வேலையாய் அமைந்தது. ஆம்! பரலோகத்தின் தேவன் அவனுக்காக யுத்தம்பண்ணினுர்; அவனைக் காப் பாற்றினுர்; அவனைக் கனம்பண்ணினுர்! இந்த மாபெரும் வெற்றியை யோசபாத் அரசனுக்கும் அவனுடைய குடிகளுக் கும் கொடுத்தது எது? ஒரே நாள் உபவாசம்! இது மிகுந்த ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? எனினும் இது ஒரு சரித்திர பூர்வமான உண்மை சம்பவம். இந்த சம்பவத்தை மனதில் வைத்துத்தான், தேசத்தில் கொடிய சூழ்நிலை ஏற்பட்ட பொழுதெல்லாம், அந்தந்த காலங்களில் 'பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்' (யோவேல் 1:14; 2:15) என மக்கள் மத்தியிலிருந்த தீர்க்கதரிசிகள் அவ்வப்பொழுது குரல் எழுப்பி னர். கணக்கற்ற இராணுவ வீரர்களை ஒரே இரவிற்குள் மடியச் செய்த வல்லமை நிறைந்த இறைவனின் கரம்தான் எத்தனை வலியது! அந்த வல்ல கரத்தை அசைய்ச் செய்த 'உபவாசம்' என்னும் சிறு ஆயுதம்தான் எத்தனை வலியது! எத்தனை வலியது!!

நண்பரே! வாழ்க்கையில் ஏற்பட்ட இன்னல்களால், மனம் உடைந்து செவ்வனே ஜெபிக்கவும் இயலாமல் தவிக்கிறீரோ? உம் கையில் நீர் பயன்படுத்தக்கூடிய இன்னும் ஒரு கூரிய ஆயுத முண்டு. அதுதான் 'உபவாசம்.' யோசபாத் என்னும் அரசன் வெட்கப்படாமல் பயன்படுத்திய அந்த ஆயுதத்தை நீரும் ஜெப நேரத்தில் பயன்படுத்த முன்வருவீராக!

ஒருநாள் தேவகுமாரனுகிய இயேசுவின் சீடர்கள், ஒரு சிறுவ னிடத்தில் குடிகொண்டிருந்து அவன் வாழ்வை நரகமாக்கிய ஒரு கொடிய அசுத்த ஆவியைத் தங்களால் துரத்த இயல வில்லையே என அங்கலாய்த்தனர். அதற்கு அவர் கொடுத்த பதில் என்ன தெரியுமா? 'இவ்வகை பிசாசு ஜெபத்தினுலும், உபவாசத்தினுலுமேயன்றி மற்றெவ்விதத்தினுலும் புறப் பட்டுப் போகாது' (மா. 9:29). ஆம்! 'உபவாசம்' என்னும் சீரிய ஆயுதம், 'ஜெபம்' என்னும் வல்ல ஆயுதத்துடன்

இணைந்து செயல்படும்பொழுது அது இரட்டைக் குழல் துப்பாக்கியாக மாறி செயல்படுகிறது. எனவே, நாமும் நம் ஜெப வாழ்வில் உபவாசத்திற்கு ஒரு முக்கிய இடம் கொடுப்பது இன்றியமையாதது.

உபவாசம் கலந்த ஜெபத்தில் ஒரு வல்லமை காணப்பட காரணம் யாது? எப்படி உபவாசிப்பது? எத்தனை நாள் உபவாசிப்பது? என்றெல்லாம் நம் உள்ளத்தில் கேள்விகள் எழுவது இயற்கையே. அவற்றிற்கெல்லாம் வேதத்திலிருந்தே நாம் விடை காண முயலுவோம்.

உபவாச ஜெபம் என்பது என்ன?

உணவு மனிதனுடைய அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாததாம். எனினும், தேவனோடு தம் மனதை ஒருமுகப் படுத்தி, இறை தியானத்தில் முழுவதுமாக ஈடுபட விரும்பும் பக்தர்கள் இறைவனுடைய பிரசன்னம் உலகிலுள்ள இனிய உணவு வகைகள் அத்தனையிலும் மேலான ஒரு பொக்கிஷம் எனக் கருதி நாள் முழுவதும் முற்றிலும் உணவைத் தவிர்த்து பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர். இதையே உபவாசப் பிரார்த்தனை என்கிறோம். உபவாசப் பிரார்த்தனையில் ஈடுபடும் சிலர் ருசிகரமான உணவு வகைகள் அத்தனையையும் தவிர்த்து தண்ணீர் மட்டுமே அருந்துகின்றனர் (தானி. 10:3). வேறு சிலரோ தண்ணீர்கூடக் குடிக்காமல், தேவனுடைய சமுகத்தில் பிரார்த்தனையில் ஆழ்ந்துவிடுகின்றனர் (எஸ்தர் 4:16; யோனா 3:7; லூ. 4:2; உபா. 9:9,18). அவரவர் தம் தம் திராணிக்குத் தக்கதாக தண்ணீர் குடித்தோ, குடிக்காமலோ உபவாசிக்கின்றனர். இரண்டுவித உபவாசத்தையும் தேவன் அங்கீகரிக்கிறார்.

இவ்வாறு உணவைத் தவிர்த்து, தேவனுடைய பாதத்தில் பிரார்த்தனைக்கு முற்படும்பொழுது இரண்டுவித நன்மைகள் ஏற்படுகின்றன. முதலாவது, குடலுக்குள் சென்றுவிட்ட உணவை எப்படி ஜீரணிக்கவைப்பது? உடலின் எந்தெந்த பாகங்களுக்கு, உறுப்புகளுக்கு அனுப்பிவைப்பது? என்ற கவலை உபவாச நேரத்தில் உடலுக்கு இல்லாமற்போகிறது.

எனவே, நம் பிரார்த்தனை நேரத்தில் உடலும் நமக்குப் பூரண ஒத்துழைப்பைக் கொடுக்கிறது. உடலும் உள்ளமும் ஒரு மனமாகி இறைவனைத் தேட உபவாசம் வழிவகுக்கிறது.

இரண்டாவதாக, இறைவனின் பிரசன்னத்தை நாடுவதற்காக இன்றியமையாத உணவையும் நாம் ஒதுக்கி வைக்கும்பொழுது இறைவன் அந்த தியாகத்தைக் கௌரவிக்கிறார். காரணம், உண்ணுவதை அறவே நீக்கி வைத்து, சரீரத்தில் அதனால் உண்டாகும் பலவீனத்தோடு பிரார்த்தனை செய்யுங்கால் உபவாசிப்போர் உள்ளத்தில் இறைவனுக்கு முன்பதாக ஒரு 'தாழ்மை' எண்ணமும், தான் 'ஒன்றுமில்லை' என்ற ஓர் உணர்ச்சியும் ஏற்படுகிறது. 'தாழ்மை' இறைவனுக்கு உகந்த ஒரு குணம்.

> 'தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்' (லூ. 14:11).
>
> 'தாழ்மையுள்ளவர்களுக்கோ (தேவன்) கிருபையளிக்கிறார்' (யாக். 4:6; 1 பே. 5:5; நீதி. 3:34).
>
> 'கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்' (யாக். 4:10).
>
> 'தாழ்மைக்கும், கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும், மகிமையும், ஜீவனுமாம்' (நீதி. 22:4).

மேற்கண்ட வேதவசனங்கள் 'தாழ்மை' எவ்வாறு தேவன் நம்மை உயர்த்துவதற்கு வழிகோலாய் உள்ளது என்பதைக் காட்டுகிறது அன்றோ! உபவாசம் மனிதர் உள்ளத்தில் தேவனுக்கு முன்பதாக ஒருவித மனத் தாழ்மையை உண்டாக்குகிறது. அந்தத் தாழ்மையைக் காணும் இறைவன் உபவாசிப்பவருக்கு உதவிசெய்து அன்னாரைக் கனப்படுத்தும்படி அவர் உள்ளத்தில் ஒரு மனதுருக்கத்தைத் தூண்டுகிறது.

மேலே நாம் கண்ட யோசபாத் அரசனின் நாட்களில் இஸ்ரவேல் தேசத்தை ஆகாப் என்று ஒரு கொடிய அரசன் அரசாண்டான். அவன் தேவனுக்கு விரோதமான காரியங்களைச் செய்தபடியால் எலியா எனும் தம் தீர்க்கதரிசிமூலம் தேவன் அவன்மேல் வரப்போகும் கொடிய சாபங்களை முன்

அறிவித்தார். 'ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக்கொண்டு, உபவாசம்பண்ணி, இரட்டிலே படுத்து, தாழ்மையாய் நடந்துகொண்டான்' (1 இரா. 21:27). தன் உபவாசத்தின் வாயிலாக அவன் காண்பித்த தாழ்மை தேவனின் உள்ளத்தை உருக்கியது. அவனுக்கு மனம் இரங்கும்படிச் செய்தது. ஆம்! உணவை நீக்கி, உடலை வருத்தி, மனதை உருக்கி, தம் மனத் தாழ்மையை நாம் தேவனுக்கு முன்பதாகத் தெரியப்படுத்துவதே உபவாச ஜெபமாகும்!

உபவாச ஜெபத்தை யார் யார் எத்தனை காலம் மேற்கொள்ளலாம்?

வேதத்திலுள்ள உதாரணங்கள் யார் வேண்டுமானாலும், எத்தனை நாட்களும் தம் தம் மன நிர்ணயத்தின்படி உபவாசிக்கலாம் என விளக்குகின்றன. அவற்றுள் சிலவற்றை கீழே தருகிறேன். நீங்களே வாசித்து அறிந்துகொள்ளலாம்:

மோசே என்னும் தீர்க்கதரிசி இரண்டுமுறை 40 நாட்கள் உபவாசம்பண்ணினார் (உபா. 9:9,18).

தாவீது என்னும் அரசன் 7 நாட்கள் உபவாசித்தார் எனவும், உபவாசத்தை அடிக்கடி கையாண்டு வந்தார் எனவும் வேதத்தில் நாம் காண்கிறோம் (1 சாமு. 12:16,18; சங். 69:10).

எஸ்றா எனும் வேதபாரகனும், அவனோடிருந்த மக்களும் 3 நாட்கள் உபவாசம் செய்தார்கள் (எஸ்றா 8:15—21).

நெகேமியா என்னும் அரசாங்க உயர் அதிகாரி 'சில' நாட்கள் உபவாசித்து, எருசலேம் நகருக்காய் அழுதார் (நெகே. 1:4).

எஸ்தர் என்னும் பெர்சியா தேசத்து அரசி யூத ஜனங்களுக்காகத் தன் தோழிகளுடன் 3 நாட்கள் உபவாசம் செய்தாள் (எஸ்தர் 4:14).

தானியேல் எனும் பெர்சியா தேசத்து பிரதம மந்திரி ஒரு தடவை 21 நாட்கள் உபவாசித்தார். பலமுறைகள், பல நாட்கள் உபவாசித்து வந்தார் (தானி. 9:3; 10:3).

தேவகுமாரனாகிய இயேசுவும் 40 நாட்கள் உபவாசம் செய்தார் (லூ. 4:2).

இயேசுவின் சீடராகிய பவுல் அநேகமுறை தான் 'உபவாசங்களில்' நாட்களைக் கழித்ததாகக் கூறுகிறார் (2 கொ. 11:27).

மேற்கண்ட பட்டியல், எவரும் எந்தச் சூழ்நிலையிலும் (தம் சரீர நிலைக்கேற்ப), எத்தனை நாட்களும் உபவாசித்து, பிரார்த்தனை செய்யலாம் என உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்குகின்றது. குறைந்த நாட்கள் உபவாசிப்பதால் குறைந்த ஆசீர்வாதமும், கூடுதல் நாட்கள் உபவாசிப்பதால் கூடுதல் ஆசீர்வாதமும் நமக்குக் கிட்டும் என எண்ணுவதற்கும் இடமில்லை எனவும் இப்பட்டியல் நமக்கு விளக்குகின்றது. சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப, அவரவர் தம் தம் உபவாச நாட்களை நியமித்துக்கொள்ளலாம்! உபவாசிப்பது எத்தனை நாட்களாயினும், இறைவன் அதை அன்புடன் அங்கீகரித்து, அந் நாட்களின் ஜெபத்தை ஆசீர்வதிக்க ஆவலுடன் காத்திருக்கிறார். முக்கியமானது, உபவாசத்தின்மூலம் தேவன் முன்பு மலரவேண்டிய நம் 'உள்ளத் தாழ்மையே!'

மேற்கண்ட பட்டியலில் கண்ட மக்கள், அநேகமாக தம் உபவாச நாட்களில் இறைவனின் பாதத்தில் அமர்ந்திருந்து ஜெபத்தில் ஆழ்ந்திருந்தனர் எனக் காண்கிறோம். உபவாசிப்பது தடைகளின்றி ஜெபிப்பதற்காகவே! எனவே, நாம் உபவாசிக்கும் நாட்களில் மற்ற உலக அலுவல்களையெல்லாம் நிறுத்தி மோசேயைப்போல தேவனுடைய பாதத்தில் விழுந்து கிடப்பதே மிக்க பயனுள்ளது (உபா. 9:18). ஏசாயா 58:3 இந்தக் கருத்தைப் பின்வருமாறு விளக்குகிறது:

'நாங்கள் உபவாசம்பண்ணும்போது நீர் நோக்காமலிருக்கிறதென்ன? நாங்கள் எங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கும்போது நீர் அதை அறியாமலிருக்கிறதென்ன? என்கிறார்கள். இதோ, நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின்படி நடந்து, உங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய்ச் செய்கிறீர்கள்.'

அவ்வாறு தேவனுக்காக நேரத்தை ஒதுக்கி அவருடைய பாதத்தில் காத்திருந்து உபவாச ஜெபத்தில் ஈடுபடாதவர்களை பின்வரும் வசனத்திலும் தேவன் கடிந்துகொள்வதைப் பார்க்கிறோம்:

'நீங்கள் இந்த எழுபது வருடமாக ஐந்தாம் மாதத்திலும், ஏழாம் மாதத்திலும் உபவாசம்பண்ணி, துக்கம் கொண்டாடினபோது, நீங்கள் எனக்கென்றுதானா உபவாசம்பண்ணினீர்கள் (சக. 7:5)?' எனவே, உணவையும், தண்ணீரையும் நீக்கி வைத்துவிட்டு, நேரத்தைப் பிரார்த்தனையில் தேவனுடைய பிரசன்னத்தில் செலவிடாமல் அன்றாட வேலையில் ஈடுபடுவதென்பது ஜெபத்தின் பெயரால் வயிற்றைப் பட்டினிபோடுவதேயன்றி வேறு யாதொரு பயனும் தருவதன்று. இதன் பலன் வெறும் சரீரத் தளர்ச்சியே! தேவ அனுக்கிரகம் எதையும் அது கொண்டுவருவதில்லை. 'நான் இன்று உபவாசம் பண்ணிவிட்டேன்' என்ற மனத் திருப்தியையும், ஒருவித பெருமிதத்தையும் மட்டுமே சில வேளைகளில் கொண்டுவரக் கூடும் (லூ. 18:12).

உபவாச நாட்களில் உள்ளத்தில் காணப்படவேண்டிய பக்குவம்

'இதோ, வழக்குக்கும் வாதுக்கும் துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறீர்கள்; நீங்கள் உங்கள் குரலை உயரத்திலே கேட்கப்பண்ணும்படியாய் இந்நாளில் உபவாசிக்கிறதுபோல் உபவாசியாதிருங்கள். மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலை வணங்கி நாணலைப்போல் இரட்டிலும், சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும் எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ? இதையா உபவாசமென்றும், கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்? அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்

கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்' (ஏசா. 58:4—8).

மேற்கண்ட வசனங்கள் உபவாச ஜெபத்தை நாம் மேற்கொள்ளும்போது நம் மனம் எத்தகைய பக்குவத்தில் இருக்க வேண்டுமென விளக்குகின்றன. உபவாசத்தில் நாம் ஈடுபடும்பொழுது பரிசுத்த ஆவியானவர் மூலமாய், நம்முடைய உள்ளத்தின் ஆழத்தில் மறைந்திருக்கும் தவறான ஆசைகள், 'பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள்' (கலா. 5:20,21), இன்னும் நம் உள்ளத்தை கறைபடுத்துகிற பல காரியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அப்பொழுது நாம் அவைகளை ஒத்துக்கொண்டு ஆண்டவருடைய சமுகத்திலே அவைகளை அறிக்கையிட்டு விட்டுவிடக்கூடிய மனம் நமக்கு இருத்தல் அவசியம்.

> 'நன்மை செய்யும்படி உனக்குத் திராணி இருக்கும்பொழுது, அதைச் செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே' (நீதி. 3:27).

> 'ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாய் இருந்தும், அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்குப் பாவமாய் இருக்கும்' (யாக். 4:17)

என்ற வேத வசனங்களின்படி நன்மை செய்யத்தக்க தருணங்களிலெல்லாம் நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்யாமற்போன தருணங்களையும் பரிசுத்த ஆவியானவர் நமக்குச் சுட்டிக் காண்பிக்கக்கூடும். அப்பொழுதெல்லாம் இந்த வசனங்களின்படி அந்தந்த மக்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு உதவிசெய்யத் தீர்மானிப்பது மிக அவசியம். சுருங்கக் கூறின், உபவாச ஜெப நேரத்தில் தேவனுக்கும், நமக்கும் நடுவில் இன்னும் கொடிய மலைபோல் எழும்பி நிற்கும் வேண்டாத காரியங்களை அறிக்கைசெய்து விட்டுவிட்டு (1 யோ. 1:9) அதன்மூலம் தேவனுடன் ஒப்புரவாகும் ஓர் இதயமும், நம்மில் அன்புகூருகிறதுபோல, மற்றவர்களிடத்திலும் அன்புகூரும் ஓர் இதயமும் நமக்கு மிகமிக அவசியம்.

நண்பர்களே! உபவாசம் நம்மை தேவனிடம் நெருங்கிச் சேரும்படி செய்கிறது. நம் வாழ்வில் அவர் வல்லமை அதிகமாய்ப் பெருகும்படிச் செய்கிறது.

ஏறக்குறைய 25 வருடங்களுக்கு முன்பு பிலிப்பைன்ஸ் தேசத்திலுள்ள மணிலா நகரத்தில் ஓர் ஊழியர் இருந்தார். ஒருநாள் அவர் வானொலிப் பெட்டியில் செய்திகளைக் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது வானொலி அறிக்கையாளர் பின்வருமாறு ஓர் அதிர்ச்சி தரும் செய்தியைக் கூறினார்:

'மணிலாவில் ஓர் ஏழைப் பெண் திடீரென அவள் கண்களுக்கு குள்ளமும், நெட்டையுமான இரு கரிய உருவங்கள் தென்படுவதாகவும், அவைகள் வந்து அவளைக் கடித்துத் துன்புறுத்துவதாகவும் அவள் கூறினாள். இரவோ, பகலோ எந்த நேரமும் எந்த சுவரையும் கடந்து அவைகள் வந்துவிடுகின்றனவாம். வந்து அவளைத் தம் கூரியபற்களால் கடித்துத் துன்புறுத்துகின்றனவாம். அந்த நேரத்தில் அவள் இடும் இரைச்சல் உள்ளத்தைக் கலங்க வைக்கிறது. அவள் படும் வேதனையை சகிக்க முடியவில்லை. அவளைக் குணப்படுத்த பலர் எடுத்த முயற்சிகள் எல்லாம் வீண்போயிற்று. இப்பொழுது ஒலி நாடாவில் பதிவுசெய்யப்பட்ட அவளுடைய கூக்குரலை ஒலிபரப்பப்போகிறோம்.'

இந்த அறிக்கையைத் தொடர்ந்து அந்தப் பெண்ணின் துயரக் குரலை ஒலிபரப்பினர். அதைக் கேட்ட வினாடியில் அந்த ஊழியரின் உள்ளம் அந்தப் பெண்ணின்பால் மிகப் பெரிய மனதுருக்கத்தை உண்டாக்கியது. அந்தக் கரிய உருவங்கள் அசுத்த ஆவிகளே எனத் தெரிந்துகொண்டார். அடுத்த நாளே அவளை நேரில் காணச் சென்றார். அவளோடு பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அந்தப் பெண், 'அதோ, அந்த உருவங்கள் வருகின்றன' என்று கூச்சலிட்டுக் கதறினாள். அவள் உடலில் யாரோ பற்களினால் கடித்தது போன்ற காயங்கள் தோன்றின. அவளுடைய அலறல் அந்த ஊழியரின் உள்ளத்தைச் சுக்குநூறாக உடையும்படிச் செய்தது. மறுகணம் விசுவாசத்தோடு அந்தத் தீய ஆவிகளை இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அவளைவிட்டு விலகுமாறு கட்டளையிட்டார்.

பல மணி நேர போராட்டத்திற்குப் பின்பு அவைகள் விலகின. அவள் ஒரு தற்காலிக விடுதலை பெற்றாள். எனினும் அவைகள் மறுபடியும் திரும்பி வந்து அவளைத் தொந்தரவு செய்யக்கூடும் என்பதையறிந்த ஊழியர், 'கட்டாயமாக நமக்கு இதில் வெற்றியுண்டு. எனவே நான் திரும்ப ஜெபிப்பதற்காக வருவேன்' எனக் கூறி வீடு திரும்பினார்.

தம் வீட்டில் மிகுந்த கண்ணீரோடும் உபவாசத்தோடும் ஆண்டவருடைய பாதத்தில் பல மணி நேரங்கள் காத்திருந்தார். புதிய வல்லமையோடும், பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையோடும், அந்தப் பெண்ணின்மீது உண்மையான கிறிஸ்துவின் மனதுருக்கத்தோடும் அந்தப் பெண்ணைக் காணச் சென்றார். வழக்கம்போல் அந்த அசுத்த ஆவிகள் வந்து அந்தப் பெண்ணைத் துன்புறுத்த ஆரம்பித்தன. அந்த ஊழியரோ தேவனுடைய ஆவியினால் நிறைந்து அவற்றைக் கடிந்துகொண்டார். தேவனுடைய வல்லமை அந்தப் பெண்ணின்மீது இறங்கியது. ஒரே நொடிதான்! மறுகணம்! அவளிடமிருந்து அசுத்த ஆவிகள் நிரந்தரமாக விடைபெற்றுச் சென்றன. இவற்றையெல்லாம் நேரில் பார்த்துக்கொண்டிருந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களும், நகரத்தந்தையும், போலீஸாரும், பத்திரிகை நிருபர்களும், பொதுமக்களும் ஊழியரை வெகுவாய்ப் பாராட்டினர். கிறிஸ்தவ ஆலயம் ஒன்றைக் கட்ட அவருக்கு அனுமதி கொடுத்தனர். கிறிஸ்துவின் பெயர் வெகுவாக மகிமைப்பட்டது.

மேற்கண்ட நிகழ்ச்சி உபவாசம் எவ்வாறு ஊழியத்திலும் நமக்கு உறுதுணையாய் உள்ளது என்பதை விளக்குகின்றது. உபவாச ஜெபம் கொடிய அசுத்த ஆவிகளின் வல்லமையைப் பகிரங்கமாக முறியடித்து வெற்றி கொடுத்தது உண்மையாயின், நம் வாழ்வின் எல்லா இடையூறுகளையும் நீக்கி, நமக்கு உதவுவதும் திண்ணமன்றோ? நாமும் நம் ஜெப வாழ்வில் உபவாசம் எனும் வலிய ஆயுதத்தை கடைப்பிடிக்க இன்றே தீர்மானிப்போம். இயேசு பெருமானின் இனிய நாமத்தில் எல்லாப் பிரச்சினைகளிலும், எவ்வித சூழ்நிலைகளிலும் வெற்றி காண்போம்.

8

'தேவனேடே மனுஷருக்காக வழக்காடுகிறவர்'

'ஆசிசெய்திடுவார், அருள்மிக அளிப்பார்,
அம்பரந்தனில் எனக்காய் ஜெபிப்பார்;
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்,
மோட்சவழி, சத்தியம், வாசல், உயிர் எனும்
—என் மீட்பர்.'

மத்தியஸ்தர் இயேசு!

'ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறது போல, தேவனேடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானல் நலமாயிருக்கும்' (யோபு 16:21).

யோபு பக்தன் தம் பிள்ளைகளையும் சொத்தும் மற்றும் உடைமைகளையும் இழந்து, தன் உடல் முழுவதும் ஆருத கொப்புளங்களால் கொடிய இக்கட்டில் நிறைந்து தவித்த பொழுது, உண்மையான மனதுடன் தேவனைத் தேடினர். அப்பொழுது இறைவனைக் காணவேண்டும் என்ற நாட்டத்தோடு கூறிய வார்த்தைகளைப் பாருங்கள்:

'நான் அவரை (தேவனை) எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும் . . . அவருடைய மறுமொழிகளை நான் அறிந்து அவர் எனக்குச் சொல்வதை உணர்ந்துகொள்வேன்' (யோபு 23:3,5). 'அப்பொழுது நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்து சேர்ந்து என் நியாயத்தை அவருக்கு முன்பாக வைத்துக் காரியத்தை ரூபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன்' (யோபு 23:4).

'சர்வ வல்லவரோடு நான் பேசினல் நல்லது; தேவனேடே நியாயத்திற்காக வழக்காட விரும்புவேன்' (யோபு 13:3).

இவ்வாறு யோபு புலம்பிய மொழிகளிலிருந்து தேவனைச் சந்திக்க அவரால் இயலாதிருந்தமை நமக்குப் புலனுகிறது. ஆகவே தனக்கும் தேவனுக்கும் நடுவே மத்தியஸ்தர் ஒருவரை நாடினர். அவர் மூலம் தனது குறைகளைத் தீர்க்க வல்ல வேருெருவரைப் பெற விரும்பினர். 'எங்கள் இருவர் மேலும் தன் கையை வைக்கத்தக்க மத்தியஸ்தன் எங்களுக்குள் இல்லையே' (யோபு 9:33) என்று அவர் மனமுடைந்து புலம்பியதிலிருந்து, அத்தகைய ஒரு மத்தியஸ்தனை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதையும் நாம் எளிதில் தெரிந்துகொள்கின்ருேம்.

அன்பானவரே, யோபுவின் நிலை எவ்வளவு பரிதாபகரமாயிருந்தது! நீரும் ஒருவேளை அதேவிதமாகப் பரிதாப நிலையிலிருந்துகொண்டு தவிக்கலாம்! உம்முடைய மன்ருட்டுகள் கேட்கப்படாதவைபோலத் தோன்றும் வேளையில் 'எனக்காக வேறு யாராவது மன்ருடமாட்டார்களா?' என்று நினைக்கக் கூடும். 'தேவனேடு எனக்காக மன்ருடிக் கெஞ்சுபவர்கள் யாராவது இருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்!' என்று பல சமயங்களில் நீர் எண்ணியிருக்கலாம். கவலைப்படவேண்டாம். உமக்கொரு மத்தியஸ்தன் இருக்கின்ருர்! 'தேவன் ஒருவரே, தேவனுக்கும், மனுஷருக்கும், மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனுகிய கிறிஸ்து இயேசு அவரே' என்று 1 தீமோத்தேயு 2:5,6 வசனங்கள் கூறுகின்றன. ஆ! எவ்வளவு இனிமையான வார்த்தைகள்! யோபு வாழ்ந்த காலத்தில் தேவகுமாரனுகிய இயேசுகிறிஸ்து இன்னும் மனிதனுய்ப் பூமியில் வந்து தோன்றியிருக்கவில்லை. ஆனல் இப்பொழுதோ அவர் உலகத்துக்கு வந்து, மனுமக்களுக்காகச் சிலுவையில் தம் உயிரினை ஈந்து, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாகிவிட்டன. அவர் சாவினை வென்று, உயிரோடெழுந்து, இன்று விண்ணகத்தில் தேவனுடைய வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்ருர் (மா. 16:19). அங்கிருந்து

நமக்காகப் பிதாவினிடம் வேண்டுதல் செய்கிறவராயிருக்கிறார்!

'கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்தும் இருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர். நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே' (ரோ. 8:34) என்ற வேத வசனம் இக்கூற்றினை வலியுறுத்துகிறது.

'மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவர்' (எபி. 7:25).

'நீதிபரரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்' (1 யோ. 2:1) என்ற வசனங்களும் இவ்வுண்மையை விளக்குகின்றன. யோபு தமக்காக வாதாட ஒருவருமில்லையே என்று மனங்கவன்றார். ஆனால் இன்றோ, நமக்காகப் பரிந்துபேசவும், வாதாடவும் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து தாமே தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார் என்ற சத்தியம் எத்துணை ஊக்கம் தருகிறதாயிருக்கிறது!

இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலும் தம்முடைய அடியார்களுக்காக பரிந்து மன்றாடினார். அவர் மண்ணுலகை விட்டு விண்ணுலகம் போந்ததற்கு முன்னர் தம்முடைய சீடர்களுக்காகப் பிதாவை நோக்கி, 'நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்' (யோ. 17:15) என்று பரிவுடன் வேண்டினார். அன்பரே, உம்மீது பரிவும் இரக்கமும்கொண்ட ஒரு மத்தியஸ்தர், உமக்காகப் பரிந்து பேசும்படிச் சிங்காசனத்தில் தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்துள்ளார் என்ற உண்மை உம்முள்ளத்தை எவ்வளவு உற்சாகப்படுத்த வேண்டும்!

1974ம் ஆண்டில் நானும் என் மனைவியும் வெளிநாடு ஒன்றிற்குச் சென்றிருந்தோம். சுற்றுலாவை முடித்துவிட்டுத் திரும்புங்காலை, அந்நாட்டின் தலைநகரிலிருந்து பிறிதொரு விமான நிலையத்திற்கு நாங்கள் பயணமானோம். அந்த விமான நிலையத்தில் ஓர் அதிகாரி எங்கள் கடவுச் சீட்டைப் (Passport) பரிசோதித்துவிட்டு, தலைநகர விமான நிலையத்திலுள்ள அதிகாரிகள் எங்கள் சீட்டில் ஏதோ கையெழுத்திடவில்லை என்றும், அதனால் நாட்டைவிட்டு வெளியில் செல்ல எங்களை அனுமதிக்க முடியாது என்றும் கூறிவிட்டனர். முற்றிலும் எங்களுக்குப் புதியதான அந்த அந்நிய தேசத்தில் என்ன செய்வது என்று நாங்கள் திகைத்தோம். அவரோடு எவ்வளவு சொல்லிப் பார்த்தும் பயனில்லை. 'உங்களுக்காக விமானம் இதற்குமேல் காத்திருக்க முடியாது' என்று விமான அதிகாரிகளும் கூறிவிட்டனர். 'அந்தோ, அறவே பிறர் அறிமுகமில்லாத இந்த அந்நிய தேசத்தில் எங்களுக்காகப் பரிந்து பேசிட யாருமில்லையே!' என்று நாங்கள் அங்கலாய்த்து நின்ற வேளையில் எல்லாவற்றையும் தூர நின்று கவனித்துக்கொண்டிருந்த அந்நாட்டைச் சேர்ந்த ஒருவர் எங்களிடம் வந்து 'காரியம் என்ன?' என்று வினவினார். பின் சிரித்த முகத்துடன் 'கடவுச் சீட்டு' அதிகாரிபால் சென்று, ஏதோ அவர்களுடைய மொழியில் பேசினார். அவ்வளவுதான்! மறுபடியும் நாங்கள் கடவுச் சீட்டு அதிகாரியிடம் அழைக்கப்பட்டோம். அவர் வேறு சில படிவங்களில் எங்கள் கையெழுத்தை வாங்கிக்கொண்டு, அதே விமானத்தில் நாங்கள் ஏறிக்கொள்ளும்படி எங்களுக்கு அனுமதி வழங்கினார். அதிகாரிக்கும், முன்பின் தெரியாத புதிய நண்பர்க்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றியைக் கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமாயிருந்த அதே விமானத்தில் விரைவாக ஏறி அமர்ந்துகொண்டோம்.

அதுபோலவே, நம்முடைய இக்கட்டான சமயங்களில் பரமபிதாவிடம் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் நமக்காகப் பரிந்து பேசுவார்! நம் பொருட்டுத் தேவ சமூகத்திற்குச் சென்று, 'இவன் என்னுடையவன், இவள் என்னுடையவள், எனவே, நேச பிதாவே, நீர் உதவி செய்ய வேண்டும்' என்று வேண்டிக்கொள்வாரோ? அல்லது 'பிதாவே, இவர்களுக்காக என் ஜீவனை நான் தியாகஞ் செய்ததை நினைத்தருளும். என் நாமத்தினிமித்தம் இவர்களுக்கு உதவிசெய்தருளும்' என்று மன்றாடுவாரோ? அல்லது 'பிதாவே, இவன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு வேண்டிக்கொள்ளுகிறேன்' என்று பேதுருவுக்காகப் பிரார்த்

தித்ததுபோல, நமக்காகவும் ஜெபிப்பாரோ? (லூ. 22:31, 32). அதனை நாம் அறியோம். எவ்வாறாயினும் நமக்காக அவர் வேண்டிக்கொள்வார், பரிந்து பேசுவார் என்பது மட்டும் நிச்சயம்.

அன்பரே, கிறிஸ்து இயேசுவை உம் சொந்த இரட்சகராக உம் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறீரா? அவ்வாறாயின் உம்முடைய இக்கட்டான வேளையில், இயேசு உம் மத்தியஸ்தராயிருப்பார் என்பது உறுதி. நீர் பெரும் பேறு பெற்றவர் என்பதைச் சற்றே எண்ணிப்பார்ப்பீராக! உம் உள்ளம் கலங்காதிருப்பதாக. நீர் துன்பப்படும் வேளையில் உமக்காகப் பரிந்துபேசும் நேசரை நினைத்துத் தைரியங்கொள்வீராக!

'அருள்மிக அளிப்பார், ஆசிசெய்திடுவார்
அம்புவிதனில் எனக்காய் ஜெபிப்பார்!'

என்ற பாடல்தான் எத்தனை உண்மையானது!

பரிசுத்த ஆவியானவர்

'அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாதிருக்கிறபடியினால் ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்' (ரோ. 8:26).

நமது அருமை இரட்சகர் இவ்வுலகை விட்டுப் பரலோகம் எழுந்தருளுமுன்னர், 'நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படியாகச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் . . . அவர் உங்களுடனே வாசம்பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்' (யோ. 14:16,17) என்று வாக்கருளிச் சென்றார். அதன்படியே அவருடைய சீடர்களும் பெந்தெகொஸ்தே நாளில் தேவ ஆவியானவரால் நிரப்பப்பட்டனர் (அப். 2:1–4). அந்த அனுபவத்திற்குப் பின்னர், அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் அவர்களுக்குள்ளும் அவர்களுடனும் எப்போதும் பரிசுத்த ஆவியானவர் காணப்பட்டார் (அப். 15:8; 5:32). நம்முடைய வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியினால் நிறைந்த அனுபவம் நமக்கிருக்கவேண்டுமென்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது (எபே. 5:18). தேவனுடைய ஆவியினால் நிறைந்து நாம் வாழும்போது, பரிசுத்த ஆவியானவர் நம்முடைய பெலவீன நேரங்களில் நமக்காகத் தேவனிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமது நாவினாலேயே வேண்டுதல் செய்ய ஆரம்பிக்கிறார். துக்கம் நமது தொண்டையை அடைக்கும்பொழுது, என்ன ஜெபம் செய்யவேண்டுமென்றும், எப்படி ஜெபம் செய்யவேண்டுமென்றும் தெரியாமல் தயங்கும் வேளையில் நம்முடைய நாவு அசைய மறுக்கும் சமயத்தில், நமக்குள்ளிருக்கும் தேவ ஆவியானவர் நமது நாவினாலேயே நமக்காகத் தேவனை நோக்கி வேண்டிக்கொள்கிறார். ஓர் அருமையான சான்று காண்போம்.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையிலே யூதாஸால் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவு மிகவும் துயரமார்ந்த இரவெனலாம். அன்று கெத்செமனே தோட்டத்தில் இயேசு தம்முடைய சீடர்களைப் பார்த்து, 'என் ஆத்துமா மரணத்திற்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது' (மத். 26:38) என்று கதறினார். 'அவர் திகிலடையவும் மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்' (மா. 14:33). 'அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது' (லூ. 22:44).

இப்படிப்பட்ட மிகுந்த வேதனையின் மத்தியிலும், 'ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல; உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்றே மறுபடியும் மறுபடியும் ஜெபித்தார் (மா. 14:36–39).

இங்ஙனம் முற்றிலுமாகத் தம்மைத் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புவித்து ஜெபிக்கும்படி அவருக்கு உதவி செய்தது யார்? 'நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து' என்றபடி (எபி. 9:14), இயேசுகிறிஸ்துவுக்குள்ளிருந்த பரிசுத்த ஆவியானவரே! துயரம் நிறைந்த உலகினில் நாமும் அதே அனுப

வத்தைப் பெற்று அனுபவிக்கலாம். இதற்காகவே நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய ஆவியால் நிறைந்திருப்பது மிக இன்றியமையாதது.

‘ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்’ (யாக். 5:16)

‘நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்’ (யோ. 13:34) என்று நம் ஆண்டவர் சொல்லிப்போனார்.

‘அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள்’ (எபே. 4:2); ‘ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்’ (கலா. 6:2). ‘ஒருவரையொருவர் ,தாங்குங்கள்’ (கொலோ. 3:13) என்று அப்போஸ்தலனாகிய பவுல் அறிவுறுத்தியுள்ளார். இந்தக் கட்டளைகளின்படி கிறிஸ்துவின் அடியார்கள் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். துன்பங்கள் நம்மைச் சூழும்போது நம் விசுவாசம் குன்ற நேரிடுகிறது. எனவே, அத்தகைய சந்தர்ப்பங்களில் மற்றவர்களுடைய விசுவாசத்தை நாம் நாடுவதில் தவறில்லை. ‘எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே’ (2 தெச. 3:2) என்று பவுலடியாரும் வேண்டினாரே!

தன் சகோதரனாகிய லோத்து வாழ்ந்த சோதோம் கொமோரா பட்டணங்களை தேவன் அழிக்க முற்பட்டபொழுது, ஆபிரகாம் லோத்துவுக்காகவும் அப்பட்டணத்தாருக்காகவும் தேவனிடம் பரிந்து மன்றாடவில்லையா? (ஆதி. 18:23–33.) தேவனுடைய கோபத்துக்கு ஆளான மீரியாமுக்காக மோசே கர்த்தரிடம் பரிந்து கெஞ்சினார் அன்றோ! (எண். 12:13.) விக்கிரக ஆராதனை செய்து தேவனை விட்டு விலகிப்போன இஸ்ரவேல் புத்திரர்களுக்காகவும் ஆரோனுக்காகவும் மோசே உபவாசித்துக் கதறினாரே! (உபா. 9:18,20,25.)

தேவனால் கைவிடப்பட்ட சவுலுக்காகத் தீர்க்கதரிசியாகிய சாமுவேல் மனம் நொந்து ஜெபித்தாரன்றோ! (1 சாமு. 15:11,35.) சாறிபாத் ஊர் விதவையின் குமாரனுடைய உயிர் மீண்டும் திரும்பி வரும்படிக்கு எலியா தீர்க்கதரிசி கதறி விண்ணப்பம் பண்ணினாரே! (1 இரா. 17:20–22.) சிறைப்பட்டிருந்த பேதுருவை விடுவிக்கும்படிக்குச் சபையார் ஊக்கமாய் ஜெபித்ததை அறிவோமே! (அப். 12:5.) வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்த எப்பாப்பிரோதீத்துவுக்குத் தேவன் இரங்கும்படி பவுல் வேதனையோடு ஜெபித்தார் அன்றோ! (பிலி. 2:27.)

ஆம்! மெய் பக்தருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த இத்தகைய பல அனுபவங்களை நாம் வேதாகமத்தில் காண்கிறோம். அங்ஙனமே இன்றும் பிறர் துயரங்களைத் தமதாகக்கொண்டு அவர்களுக்காகக் கண்ணீரோடு ஜெபித்துவரும் மெய்யான தேவதாசர்கள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கிறார்கள். தேவனிடத்திலும் பிறரிடத்திலும் அன்புமீதூரப்பெற்று மன்றாட்டு ஜெபங்களை ஏறெடுக்கும் ஜெபக் குழுக்கள் ஆங்காங்கே இன்றும் இருந்துதான் வருகின்றன. இவர்களுக்காகத் தேவனை ஸ்தோத்திரிப்போமாக. அத்தகையோருடைய ஜெபங்களைக் கோரிப் பயன்பெறுவோமாக.

ஒருவர் மனச் சாந்தியற்ற நிலையில் போதகர் ஒருவரிடம் வந்தார். அவர் போதகரிடம், ‘ஐயா, அல்லும் பகலும் ஓயாமல் ஏதோ ஒரு பயம் என்னை வாட்டுகின்றது. என்னால் ஜெபிக்கவும் இயலவில்லை. தயவுசெய்து என் கலக்கம் நீங்க ஆலோசனை கூறுங்கள்’ என்று கேட்டுக்கொண்டார். அப்பொழுது போதகர் சொன்னதாவது:

‘நண்பரே! தேவன் அன்புள்ளவர்; அவர் உம்முடைய விண்ணப்பங்களைக் கேட்க ஆவலாய்க் காத்துக்கொண்டிருக்கிறார். மேலும் உமக்காக இவ்வன்பின் தேவனிடம் பரிந்து பேசுதற்கு அவருடைய குமாரனாகிய இயேசுவும், அவருடைய தூய ஆவியானவரும் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றனர். அங்ஙனமாயின் உம்முடைய விண்ணப்பங்கள் தேவனுடைய சமூகத்தைச் சேர்ந்தவுடன், தேவன் உமக்குப் பதிலளிப்பார்

என்பது அதிக நிச்சயமல்லவா? பின் ஏன் வீணுக அஞ்சுகின்றீர்?'

இதைக் கேட்டவுடன் அந்த நண்பரின் பயம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தது; அதன்பின் அவருடைய ஜெப வாழ்க்கை முற்றிலும் வித்தியாசமாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.

அன்பரே, இன்று முதல் நீர் ஜெபிக்கும் பொழுதெல்லாம் இதே காட்சியை உம் மனக்கண்முன் கொணர்வீராக! அப்பொழுது உம் பயங்கள், ஐயங்கள் அனைத்தும் விளக்கின்முன் இருள் நீங்குமாப்போல நீங்கிப்போகும். அன்பின் தேவன் நீர் வேண்டிக்கொள்வதையெல்லாம் அருளிடுவார். இயேசு கிறிஸ்துவின் பிள்ளையாகிய நீர் எவ்வளவு பெரிய பாக்கியசாலி!

9

'பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன்!'

'வானத்திலிருந்து வையகம் எழுந்த புனித ஆவியே வருக!
ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றும் மாசற்ற அன்பே வருக!
உயிருக்கு உயிரே வாழ்வுக்கு வாழ்வே உண்மையின் வடிவே வருக!'

அப்போஸ்தலனுகிய யூதா எழுதின பொதுவான நிருபத்தில் ஆதிக் கிறிஸ்தவர்கள் சுவிசேடப் புரட்டர்களுக்கு எச்சரிக்கையாயிருக்கவும், மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் தங்களை உறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணும்படியும் அவர்களுக்கு அறிவுறுத்தினர். 'நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி . . . நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்' (யூதா 20–22).

பரிசுத்த பவுல் அப்போஸ்தலனும் ஆவியின் ஈவுகளாகிய தீர்க்கதரிசன வரத்தையும், அந்நிய பாஷையில் பேசுகிற வரத்தையும் குறித்து கொரிந்தியருக்கு எழுதும்போது, 'நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன்; கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன்' என்று வரைந்தார். 'பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணுதல்' என்ற அதிசயமான உச்சநிலை அனுபவத்தைக் குறித்து சற்று ஆராய்வோம்.

'பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன்' (லூ. 12:49) என்று தேவகுமாரனாகிய இயேசு மொழிந்தார். பரிசுத்த அக்கினியாம் தேவனுடைய ஆவியை மக்கள் உள்ளங்களில் அனுப்புவது மனுஷகுமாரனாகிய இயேசு வந்த நோக்கங்களில் ஒன்றாகும். எனவேதான் அவர் மரணத்தைவென்று, உயிர்த்தெழுந்து, தம்முடைய சீடரை விட்டுப் பிரிந்து, வானுலகு செல்லவேண்டிய சமயத்தில், தமது பிரிவைத் தாங்கவொண்ணாது துயரால் வருந்திய அருமை சீடரைப் பார்த்து, இயேசு, 'நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்' என்று கூறினார் (யோ. 16:7).

இயேசுகிறிஸ்து தம் அடியாரின் உள்ளத்தில் அனுப்பும் விலைமதிப்பற்ற இணையற்ற பொக்கிஷம் பரிசுத்த ஆவியானவரே. 'இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்' (2 கொ. 4:7) என்று பவுலடிகளும் தம் அனுபவத்திலிருந்து எடுத்துரைக்கின்றார். நண்பரே, இயேசுகிறிஸ்து நமக்குப் 'பாவமன்னிப்பாகிய மீட்பை' மட்டும் அருள இவ்வுலகிற்கு வரவில்லை (எபே. 1:7; கொலோ. 1:14). பாவமன்னிப்பைப் பெறுகிறவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக மாறுவது மெய்தான். ஆனால், அதன்பின்னர் தம்முடைய பிள்ளைகளைப் பரிசுத்த ஆவியானவரால் நிறைத்து, தினசரி வாழ்விலும், அவர்களை வழிநடத்துதலே இயேசுகிறிஸ்துவின் விருப்பமும் அக்கரையுமாயிருக்கிறது. 'மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்' (ரோ. 8:14) என்ற வேதவாக்கியம் அந்தச் சத்தியத்தை உறுதிப்படுத்துகின்றது.

காலஞ்சென்ற முன்னாள் பாரத முதல் பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் இளமையில் இலண்டன் மாநகரில் உள்ள கல்லூரியில் படித்து வந்தபொழுது, இந்தியாவிலிருந்த அவருடைய தந்தையார் தம் மகனின்

நலன்பற்றி அதிக அக்கறைகொண்டிருந்தாராம். ஒவ்வொரு நாள் மாலையிலும் ஜவஹர் படித்துக்கொண்டிருந்த கல்லூரியின் ஒவ்வொரு வாசலிலும் ஒரு கார் காத்திருக்க அவர் ஏற்பாடு செய்திருந்தாராம். தன் செல்வப் புதல்வன் கல்லூரியின் எந்த வாசலின் வழியாக வெளிவந்தாலும் அவரை ஏற்றிப் பத்திரமாய் வீடு கொண்டுபோய்ச் சேர்க்கவே அவ்வேற்பாட்டை அன்புத் தந்தை செய்திருந்தார்! ஆம், நம் பரம தந்தையின் விருப்பமும் அதுதான். பற்பல தீய சக்திகள் நிறைந்த இவ்வுலகில் தமது பிள்ளைகள் பத்திரமாகப் பரலோக வழியில் நடத்தப்படவேண்டும் என்ற அக்கறையோடு அவருடைய ஆவியானவரால் நம்மை நிறைக்கின்றார். எப்பக்கமும் பரிசுத்த ஆவியானவர் நம்மைச் சுற்றிலுமிருந்து பாதுகாத்து வழிநடத்துகின்றார்.

ஆறு இலட்சத்திற்கு மிகையான இஸ்ரவேல் புத்திரர்கள் எகிப்து தேசத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்குக் கர்த்தரால் வழிநடத்தப்பட்டபொழுது 'அவர்கள் நடுவிலே தம்முடைய பரிசுத்த ஆவி இருக்கக் கட்டளையிட்டார்' என்று வேதம் கூறுகிறது (ஏசா. 63:12). ஆம்! தேவன் தம் பிள்ளைகளின்மேல் வைத்துள்ள அன்பு பெரிது! அவ்வாறே இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட தம்முடைய மக்களை வழிநடத்திடத் தமது தூய ஆவியானவரை அருளவும் அவர் ஆவலாய்க் காத்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள விரும்பிக் கேட்கிறவர்களுக்கு, அவரை ஈகிறார். 'ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்' (லூ. 11:10).

'பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்பொழுது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?' (லூ. 11:10,13) என்ற அன்பர் இயேசுவின் வாசகம் தேவனுடைய தாராளத்தைத் தெளிவாய் நமக்கு விளக்குகிறதன்றோ?

ஒருநாள் முதல் வகுப்பு ஒன்றில் கப்பற்பயணம் செய்துகொண்டிருந்த பிரயாணி ஒருவர் மிகவும் சோர்ந்து வாடிய

முகத்துடன் காணப்பட்டதைக் கண்ணுற்ற கப்பற்தலைவன், பிரயாணியை அணுகி, அவர் அவ்விதம் சோர்ந்திருக்கக் காரணம் என்னவென்று வினவினார். அதற்கு அந்தப் பயணி மிகுந்த கவலையோடு, 'ஐயா, நான் ஊரிலிருந்து உண்பதற்காகக் கொண்டுவந்த ரொட்டிகள் எல்லாம் தீர்ந்துவிட்டன. காய்ந்து உலர்ந்துபோன சில ரொட்டித்துண்டுகளே இப்போது என்னிடமுள்ளன. இதை வைத்துக்கொண்டு எஞ்சிய நாட்களுக்கு என்ன செய்வது என்பதே என் கவலை!' என்று எடுத்துரைத்தார். கப்பற்தலைவன் அவரது பயணச் சீட்டைக் கேட்டு வாங்கி, 'அச்சீட்டினை வாங்கியவர்க்குக் கப்பலிலேயே உணவு வழங்கப்படும்' என்று சீட்டின் மறுபக்கம் எழுதியிருப்பதை அவருக்குச் சுட்டிக் காண்பித்தார். 'ஐயா, நீங்கள் கேட்டிருந்தால் விதவிதமான உணவு வகைகள் உங்கள் அறைக்கே கொண்டுவந்து தந்திருப்பார்களே!' என்று பகர்ந்த பொழுது, பயணி தன் அறியாமையின் காரணத்தால் தாம் பசியால் வாடியது குறித்து மிக வருந்தினார். 'என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்' (ஓசி. 4:6) என்று கர்த்தர் வேதனைப்படுகின்றார். இவ்வேதவாக்கியம் தேவனுடைய பிள்ளைகள் பலருடைய வாழ்க்கையிலுங்கூட எவ்வளவு உண்மையாயிருக்கிறது!

இயேசுகிறிஸ்துவின் விருப்பம் யாதெனில், நம் உள்ளத்தின் ஆழத்தில் 'நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும்' பாவமன்னிப்பாகிய இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருப்பதோடு நம் 'உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதி' பாய்ந்து ஓடவேண்டும். அதாவது பரிசுத்த ஆவியானவரால் நிறைந்து வழியவேண்டும் என்பதாகும் (யோ. 4:14; 7:38,39). நண்பரே, நீர் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறீரா? நீர் தேவனுடைய பிள்ளைதான் என்ற தூய மனச்சாட்சி உமக்குண்டா? அப்படியாயின் நீரும் கிறிஸ்து இயேசுவிலிருந்த பரிசுத்த ஆவியானவருக்குச் சுதந்திரவாளியாயிருக்கிறீர் என்பதை நினைவிற்கொள்வீராக! 'நாம் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே; தேவனுடைய சுதந்திரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாமே' (ரோ. 8:17). நீர் விருப்பத்துடன் அவரிடம் விரும்பிக்கேட்டால் தேவன் தம்

குமாரனாகிய இயேசுவை பரிசுத்த ஆவியால் நிறைத்ததுபோல உம்மையும் நிரப்புவது நிச்சயம். 'நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்' (யோ. 14:18) என வாக்களித்த தேவகுமாரன் உம்மைத் தமது தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியினால் நிரப்புவது உறுதி!

நல்லது, இவ்விதம் தேவனுடைய ஆவியானவரால் நாம் நிரப்பப்படுவதனால் ஜெபத்திற்கு என்ன அனுகூலம் உண்டாகிறது? என்று கேட்கலாம். 'மனுஷனிலுள்ள ஆவியேயன்றி, மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்' (1 கொ. 2:11).

'... அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்' (1 கொ. 2:10). 'என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார்' (யோ. 14:26). 'சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்' (யோ. 15:26).

ஆகவே பரிசுத்த ஆவியானவர் நாம் விரும்பி ஜெபிக்கும் ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும் தேவனுடைய திருவுளச்சித்தம் என்னவென்று நன்கு அறிவார். 'பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது' (ஏசா. 55:9) என்ற வேத வசனம் தேவனுடைய வழியை நாம் சாதாரணமாக அறியமுடியாது என்ற உண்மையைத் தெரிவிக்கிறது. இதனாலேயே, மோசே பக்தனும் 'உம்முடைய வழியை எனக்கு அறிவியும்' (யாத். 33:13) என்று ஜெபித்தார். பரிசுத்த ஆவியினால் நிறைந்து நாம் வாழும்போது, நம்முடைய ஜெபங்களைக்கேட்டு அவர் இரண்டு காரியங்களைச் செய்கிறார். ஒன்று, நாம் ஜெபிக்கும் காரியத்தைக் குறித்துத் தேவனுடைய திருவுளச்சித்தம் இன்னதென்பதை நமக்கு வெளிப்படுத்துகின்றார் (கொலோ. 1:9; எபே. 5:17,18). இரண்டாவது, 'நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியது

இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்' (ரோ. 8:26).

சுவையான கதையொன்று உண்டு: ஒரு சமயம் ஞாயிறு வேதாகமப் பள்ளி ஒன்றிற்கு இங்கிலாந்து மன்னர் வருகை புரிந்தார். அவர் இடக்கையில் தங்கத்தினால் செய்யப்பட்ட மாலை ஒன்றையும், வலக்கையில் அழகிய வேதாகமப் புத்தகம் ஒன்றையும் வைத்திருந்தார். மாலை கண்களைக் கவரும் வனப்புடையதாயிருந்தது. அரசர் வகுப்பிலிருந்த இரு மாணவர்களிடம் தம் கரங்களில் ஏந்தியிருந்த இரண்டில் எதனை அவர்கள் பெறவிரும்புகிறார்கள் என்று கேட்டார். முதற்பையன் கண்ணைப் பறிக்கும் பொன் மாலையைத் தான் விரும்புவதாகக் கூறினான். அடுத்த பையனோ மிக ஏழையாயிருந்தும் அரசனைப் பார்த்து, 'ஐயா, நான் வேதாகமத்தையே பெற விரும்புகிறேன். ஏனெனில், என் தாயார் வேத புத்தகந்தான் உலகிலே மிக விலையுயர்ந்த பொக்கிஷம் என்று கூறியிருக்கின்றார்கள். எனவே அதையே எனக்குத் தாருங்கள்' என்று பணிவுடன் கேட்டுக்கொண்டான். அரசன் பெரு மகிழ்ச்சியுடன் இருவருக்கும் அவர்கள் கேட்டுக்கொண்டதைக் கொடுத்தார். வேத புத்தகத்தைப் பெற்ற சிறுவன் பேருவகையுடன் அதனைத் திறந்து பார்த்தான். என்னே ஆச்சரியம்! வேதாகமத்தின் ஒவ்வொரு இதழும் பொற்சுடராயிருக்கக் கண்டான்! அரசன் புன்முறுவலுடன் அவனை நோக்கி, 'மகனே, நீ கண்கவரும் ஒரு பொன் மாலையைவிட வேதாகமத்தையே மிகவும் மதித்து அதைப்பெற விரும்பினமையால், அதனுள்ளே பொன் மாலையைவிட எத்தனையோ மடங்கு விலையேறப்பெற்ற பொன் ஏடுகள் அடங்கியுள்ளன. நீயே பாக்கியவான்' என்று பாராட்டினார்!

இது ஒரு கற்பனைக் கதைதான்; எனினும் அதில் எவ்வளவு அரிய கருத்துக்கள் அடங்கியுள்ளன! நாம் தேவனிடம் ஜெபிக்கும்போது எவற்றை வேண்டுகிறோம் என்பதுபற்றிய தெளிவு அவசியம். மின்னிடும் பொன்போன்ற பகட்டான உலகப் பொருட்களைக் கேட்டால், பரலோக காரியங்களை நாம் இழந்துபோகிறவர்களாயிருப்போம். ஆனால் நாம் தேவ

ஆவியினால் நிறைந்து ஜெபிக்கும்பொழுது, நம்முள்ளம் விரும்புகின்றவைகள் தேவசித்தத்திற்கு இசைந்தவையோ அல்லவோ எனப் பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த வேத எழுத்துக்களின் மூலம் நமக்கு உணர்த்துவார் (யோ. 16:13,14). ஏனென்றால் அவர் தேவசித்தத்தை அறிந்திருக்கிறார். இரண்டாவது, சரியான 'விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்' (பிலி. 2:13). நாம் விரும்பிக் கேட்பது தேவனுடைய சித்தத்துக்கு இசைந்ததோ, இல்லையோ என்று நம்முள்ளம் ஜெபவேளையில் தடுமாறுமாயின், பரிசுத்த ஆவியானவரே நமக்காக ஜெபம்பண்ணி விடுகின்றார். அவருடைய வேண்டுதலைத் தேவன் தள்ளுவாரோ? இல்லவே இல்லை! தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, 'நாம் வேண்டிக்கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை' செய்திடுவார் (எபே. 3:20).

நீர் தேவனுடைய பிள்ளை என்ற நிச்சயம் உமக்கு உண்டா? தேவனுடைய பிள்ளையாயிருப்பீரானால் ஜெப நேரத்தில் உம்மை வழிநடத்தப் பரிசுத்த ஆவியானவரை உமக்குத் தந்தருளும்படி கண்ணீரோடும் தாழ்மையோடும் தேவனிடம் கேட்பீராக! கேட்டால் அவர் உமக்குத் தம் ஆவியை அருளுவார். அப்பொழுது நீர் பரிசுத்த ஆவிக்குள் ஜெபிக்கக் கற்றுக்கொள்வீர். வேதாகமத்திலுள்ள பவுல், யூதா முதலிய பக்தருடைய ஜெப வாழ்க்கையைப்போல் உம் ஜெப வாழ்க்கையும் மாறும். நீரும் அரிய காரியங்களைச் சாதிக்கும் ஜெப வீரராய் அல்லது ஜெப வீராங்கனையாய்த் திகழ்வீர்! தேவன் உம்மை அவ்வாறே ஆசீர்வதிப்பாராக!

10

'ஞான வரங்களையும் விரும்புங்கள்!'

'ஆண்டவா! மெய் பக்தர் செய்யும்
வேண்டுகோளைக் கேட்கிறீர்;
அன்பின் ஜ்வாலை எங்கள் நெஞ்சில்
இன்று மூட்டி நிற்கிறோம்.
தாசர் தேடும் அபிஷேகம்
இயேசுவே! கடாட்சியும்;
பெந்தே கோஸ்தின் திவ்ய ஈவை
தந்து ஆசீர்வதியும்.' (பாமாலை 367)

பரிசுத்த ஆவியானவர் என்பதற்குரிய மூல அர்த்தம் 'துணைக்கு அழைக்கப்படுபவர்' என்பதாம். ஆவிக்குரிய அனுபவத்தில் ஜெபத்திலேதான் பரிசுத்த ஆவியானவரின் துணை இன்றியமையாததாயும், வல்லமையுள்ளதாயுமிருக்கக் காண்கின்றோம்.

பரிசுத்த பவுல் ஆவியின் வரங்கள் பலபற்றியும் அவை கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு அவர்களுடைய ஊழியத்தில் எவ்வாறு துணைபுரிகின்றன என்பதுபற்றியும் 1 கொரிந்தியர் 12:8–12ல் எடுத்துரைத்துள்ளார். 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் அன்பின் வரத்தைப் பற்றிப் பரி. பவுல் விரிவாகப் பேசுகிறார். பின்னர் 14ம் அதிகாரத்தில் தீர்க்கதரிசன வரத்தைப்பற்றிச் சிறப்பாகப் பேசுகின்றார். 'அன்பை நாடுங்கள்; ஞான வரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்' என்று அவர் எழுதியுள்ளார்.

பவுலடிகளும் தீர்க்கதரிசன வரத்தையுடையவராயிருந்தார் (அப். 13:1). ஆகவே அவர் தேவனுடைய சபையைப் பற்றியும், அதன் ஊழியத்தைப்பற்றியும் எல்லா ஆழ்ந்த இரகசியங்களையும் நன்கு அறிந்திருந்தார். அதை நீங்கள் வாசிக்கையில் 'கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம். இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை' (எபே. 3:5,6) என்று அவரே கூறியுள்ளார்.

'கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்' (ஆமோஸ் 3:7). அதன்படியே தேவன் சகல ஆவிக்குரிய இரகசியங்களையும் பவுலுக்கு வெளிப்படுத்தியிருந்தார். பவுலின் அளவில்லாத அறிவையும் ஞானத்தையும் பேதுரு அடிகளாரும் வியந்து கீழ்க்கண்டவாறு பேசினர்:

'நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும், தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறார். அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது' (2 பே. 3:15,16).

தீர்க்கதரிசன வரத்தின்மூலம் ஆழ்ந்த ஆவிக்குரிய இரகசியங்கள் பலவற்றைத் தேவன் பவுலுக்கு வெளிப்படுத்தினார். இவற்றை மேற்கண்ட வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. இந்தச் சத்தியத்தோடு வேறொரு முக்கியமான காரியத்தையும் நாம் தெரிந்துகொள்ளுதல் நல்லது. ஆவியின் வரங்கள் அனைத்தும் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒன்றோடொன்று இணைந்தே செயல்படுகின்றன. 'தீர்க்கதரிசன வரம் பெரும்பாலும் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் முக்கியமான காரியங்களை முன் அறிவிக்கும் வரமாகும்' (1 பே. 1:10). கீழ்க்கண்ட வேத வாக்கியம் அதனை விளக்கும்.

'தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த

மனுஷர்கள், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்' (2 பே. 1:21).

எனினும் தீர்க்கதரிசன வரம் ஒரு பக்தனுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர்மூலம் செயல்படும்பொழுது, கூடுதலாக வேறு இரண்டு வரங்கள் அதனோடு இணைகின்றன. அவைகளாவன: (i) 'ஞானத்தைப் போதிக்கும் வசனம்'; (ii) 'அறிவை உணர்த்தும் வசனம்' ஆகியனவாம் (1 கொ. 12:8). ஆ, தேவாவியானவரின் வரங்கள்தாம் எத்துணை மேன்மையானவை!

உதகமண்டலம் என்ற மலை வாசஸ்தலத்திற்கு செல்லும் குறுகிய இரயில் பாதை ஒன்று உண்டு. உல்லாசப் பயணத்திற்காக வரும் பிரயாணிகள் கேளிக்கைக்காக இந்த இரயிலில் செல்வர். இந்தத் தண்டவாளம் மற்ற தண்டவாளங்களைப் போலவே அமைப்பில் உள்ளதெனினும், இரயில் மலைப் பாதையை அடைந்தவுடன் இரண்டு தண்டவாளங்களுக்கும் நடுவே உள்ள வேறொரு குழி, குழியாக அமைக்கப்பட்ட மூன்றாவது தண்டவாளத்தின்மேல் மூன்றாவது சக்கரம் ஒன்று இறக்கப்படும். அச் சக்கரத்தில் பதிந்துள்ள பற்கள் நடுத் தண்டவாளத்தின் மேலுள்ள குழிகளுக்குள் பதிந்து இரயில் கீழே வழுக்கி விழுந்துவிடாமல் முன்னேறிச் செல்வதற்கு வழிசெய்யும்! அஃதேபோன்று பரிசுத்த ஆவியினால் நிறைந்த ஒரு வாழ்க்கையில், தேவன் ஆவியின் வரங்களை அருளிச் செய்து, ஆன்மீக வாழ்க்கை ஸ்திரமாக முன்னேறிச் செல்ல உதவிசெய்கிறார்! ஆவியின் வரங்கள் ஓர் ஆன்மீக வாழ்க்கைக்குக் கூரிய பற்களைப் போன்றதாம்!

இனி தேவனுடைய வரங்கள் எவ்வாறு இணைந்து செயல்படுகின்றன என்பதற்கு ஓர் உதாரணத்தைக் காண்போம்:

பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்ற ஓர் ஊழியரை நான் அறிவேன். ஒரு சமயம் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் அறிவித்துக்கொண்டிருந்தார். கிறிஸ்துவின் அன்பினைப்பற்றிய அச் செய்தியைக் கேட்க ஆவலோடு ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு குழுமியிருந்தனர்.

அதே சமயம் சிலர் அங்கு குழப்பம் விளைவிப்பதற்காகவும் வந்திருந்தனர். அவர்களுடைய சூழ்ச்சிகளைப் பேதை ஊழியர் சற்றும் அறியார். ஆயினும் பரிசுத்த ஆவியானவரோ நன்கு அறிந்திருந்தார். எனவே அன்று ஒரு புதுமையான காரியத்தைச் செய்யும்படி ஆவியானவர் ஊழியரை ஏவினார்.

வழக்கம்போல அன்றும் ஊழியர் இயேசுகிறிஸ்துவின் அன்பினைக் குறித்து ஒரு மணி நேரம் உரையாற்றினார். பின் திடீரென அவர், 'இயேசுகிறிஸ்து இன்றும் உயிரோடிருக்கிறார் என்பதை இப்பொழுது நிரூபிப்பேன்' என்றார். மேடையிலுள்ள பல பெட்டிகளில் மக்கள் போட்டிருந்த ஜெப வேண்டுகோள் தாள்கள் குவிந்திருந்தன. ஊழியர் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஒரு குருவானவரிடம் பெட்டியிலிருந்து ஏதாவதொரு விண்ணப்பக் கடிதத்தை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். அவ்வாறே தலைவரும் ஒரு பெட்டியில் கிடந்த பல கடிதச் சுருள்களின் நடுவே துழாவித் தம் விருப்பம்போல் ஒரு காகிதத் துண்டைக் கையில் எடுத்தார். அதில் இலங்கையில் அதிக சுகவீனமாயிருந்த தன் தகப்பனாருக்காக ஜெபிக்கும்படி ஓர் அம்மையார் எழுதியிருந்தார்கள். ஊழியரின் விருப்பத்தின்படியே அம்மையார் மக்கள் திரளின் மத்தியிலிருந்து மேடைக்கு வருமாறு தலைவர் அழைப்பு விடுத்தார். மதிப்பான தோற்றமுடைய அம்மையார் ஒருவர் அவ்வாறே மேடைக்கு ஏறி வந்தார்கள். அந்த ஜெபவேண்டுகோளை எழுதியது தாமே என்று உறுதிசெய்தார்கள். அப்பொழுதுதான் பரிசுத்த ஆவியானவரின் தம் வல்லமை விளங்கியது.

தேவ ஊழியர் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஒரு விநாடியில் எத்தனையோ மைல்களுக்கு அப்பால் வேறொரு நாட்டில் சுகவீனமாயிருந்த அவர்களுடைய தகப்பனாரின் ஆவிக்குரிய வாழ்க்கை, பெலவீன வாழ்க்கை, அவருக்கு நோய் வந்த விதம்பற்றி மிகவும் தெளிவாய் ஊழியர் விவரித்தார். அவர் கூறியவை அத்தனையும் முழுவதும் சரியாயிருந்தமையைக் கண்டு அந்த அம்மாள் பிரமிப்படைந்து கண்ணீர் பெருக்கினர். குழுமியிருந்த ஆயிரக்கணக்கானோர் முன்பாக ஊழியர்மூலம் ஆவியானவர் வெளிப்படுத்தியதெல்

லாம் உண்மையென்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். பின்பு ஊழியர், 'அம்மா, உங்களோடுகூட இந்த மேடையில் நின்றுகொண்டே உங்கள் தகப்பனுரை இயேசுகிறிஸ்து தொட்டுச் சுகமாக்கும்படி ஜெபிப்பேன். இந்த விஞடியில் அவ்வாறே அவர் சுகமடைவார். நீங்கள் அவரிடமிருந்து தாம் குணமடைந்ததாக எழுதியனுப்பும் கடிதத்தை என் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக அனுப்புவீர்களா?' என்று கேட்டார். வியப்பில் மூழ்கியிருந்த அந்த அம்மாள் அதற்குச் சம்மதித்தார்கள். உடனே ஊழியர், கிறிஸ்துவின் அன்பினுலும், மனதுருக்கத்தினுலும் நிறைந்தவராய் பல மைல்களுக்கு அப்பால் இலங்கையில் சுகவீனமாயிருந்த அவர்களின் தகப்பனுரை அந்த விஞடியிலேயே கிறிஸ்து குணமாக்குமாறு கண்ணீரோடு ஜெபித்தார் (ஊழியரைக் கிண்டல் செய்ய வந்தவர்களும் வியப்பில் ஆழ்ந்தனர். அவர்களும் கிறிஸ்துவின் பாதத்தில் சரணடைந்தனர்). சில நாட்களுக்குப்பின் இலங்கையிலிருந்து அந்த அம்மாளுக்கு அவர்களுடைய தகப்பனுர் அதே சமயம் குணமடைந்ததாகக் கடிதம் வந்தது. இந்தச் செய்தியை ஊழியர் பத்திரிகையில் பிரசுரித்த பொழுது ஆச்சரியமடையாதோர் யார்? அன்று நடந்த கூட்டத்தில் ஆவியானவர் காரியங்களை வெளிப்படுத்தும் விந்தையைக் குழப்பம் விளைவிக்கக் காத்திருந்த மக்களும் கண்டு மனம் மாறினர்.

மேற்கண்ட அற்புதம் நிகழக் காரணமாயிருந்த ஆவியின் வரங்களைப்பற்றிச் சற்று சிந்திப்போம். பல நூறு மைல்களுக்கு அப்பால் வாழ்ந்த ஒருவரை மேடையிலிருந்து காணும்படி அவ்வூழியருக்கு உதவி செய்தது, 'அறிவை உணர்த்தும் வசனம்' என்ற வரமாகும்! அவரை அற்புதமாய்க் குணமாக்குதல் தேவனுடைய திருவுளச்சித்தம் என்று அவருக்கு ஒரு விஞடியில் போதித்தது, 'ஞானத்தைப் போதிக்கும் வசனம்' என்ற வரமாகும்! (1 கொ. 12:8). ஆயிரக்கணக்கான மக்கள் முன் பகிரங்கமாகவும் அச்சமின்றித் தைரியமாகவும் தேவன் அவரை அவ்வாறு குணமாக்கப் போகிருர் என்று அறிவிக்கும்படி அவரைத் தூண்டியது, 'தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம்' ஆகும்! அவ்விஞடியி

லேயே அற்புதமாய் அவர் சுகமடையவேண்டும் என்று பிரார்த்திக்கும்படி அவரை உந்திய இரு வரங்கள், 'விசுவாசம்', 'அற்புதங்களைச் செய்யும் ஆற்றல்' என்பவைகளாகும்! தூர தேசத்தில் நோயுற்றிருந்தவரின் உடலில் அவ் விஞடியே சுகத்தைக் கொண்டுவந்தது, 'தேவனுடைய குணமாக்கும் வரம்' ஆகும்!

நண்பரே, பரிசுத்த ஆவியின் வரங்கள் இணைந்து இசைந்து செயல்புரியும் விதந்தான் என்னே! என்னே! ஆகவே பவுலடிகளும், 'அன்றியும் சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து, நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை' (1 கொ. 12:1) என்று வாஞ்சையோடு எழுதினுர். ஆவியின் வரங்கள் ஊழியத்திற்கு மட்டுமின்றி, நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கும் துணைபுரிய அருளப்படுகின்றன என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. இந்த வரங்களின் மூலம் பரிசுத்த ஆவியானவர் பிலிப்பை வழிநடத்தினுர் (அப். 8:5–8; 29). பேதுருவுக்கு ஆலோசனை வழங்கினுர் (அப். 10:19). அப்போஸ்தலரிடையே பிரச்சினைகள் ஏற்பட்டபொழுது, ஒரு மனிதனைப்போல் அவர்களுடனிருந்து அவற்றைத் தீர்த்து வைத்தார் (அப். 15:29). பவுலையும் பர்னபாவையும் தம் ஊழியத்திற்கென அழைத்தார் (அப். 13:2). எங்கெங்கு போகக்கூடாது என்று அவர்களை எச்சரித்தார் (அப். 16:6,7). கொந்தளித்துப் பொங்கிய சமுத்திரத்தின் மத்தியில், 'உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது' என்று முன்னறிவித்தார் (அப். 27:34). சுருங்கச் சொன்னுல், உற்ற நண்பனைப்போல எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்களோடிருந்து, ஆவியின் வரங்களின் மூலமாய்த் தமது சித்தத்தை அவர்களுக்கு அவ்வப்பொழுது வெளிப்படுத்தி, அற்புதங்கள்மேல் அற்புதங்கள் செய்து தம் அடியாரை வழி நடத்தினுர். அருமை நண்பரே, உம் வாழ்க்கையில் நேரிடும் இன்ப, துன்ப நேரங்களில் உம்மை வழிநடத்துமாறு தமது வரங்களை ஈவதற்குப் பரிசுத்த ஆவியானவர் காத்துக் கொண்டிருக்கிருர். அவ்வாறே ஜெப நேரத்திலும் உம்மோடு பேசி உம்மை வழிநடத்தப் பரிசுத்த ஆவியானவர் தம் வரங்களுக்குக் காத்திருக்கிருர். ஆகவே, 'ஆண்டவரே,

நான் உம்மோடுகூட என் ஜெப வாழ்வின்மூலம் உலாவிட விழைகின்றேன். என்னையும் உம்முடைய பரிசுத்த ஆவியான வரின் வரங்களினால் நிரப்பமாட்டீரா?' என மன்றாடி தேவ ஆவியின் வரங்களைப் பெற்று அனுபவிப்பீராக!

நான் மிக விரும்பும் ஜெபம் ஒன்று வேதாகமத்திலுண்டு. அது பக்தனாகிய எலிசாவின் ஜெபமே. தீர்க்கதரிசியாகிய எலியா இவ்வுலகைவிட்டுப் பரத்துக்கு எடுத்துக்கொள்ளப் படும் வேளை வந்தபொழுது, எலியா எலிசாவை நோக்கி, அவர் பெற விரும்புவதென்ன? என்று வினவியபொழுது எலிசா அளித்த பதில் அது!

'உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப் பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்' என்பதே எலிசாவின் வேண்டுகோள்! *(2 இரா. 2:9.)*. தேவனும் அவ்வார்த்தை களைக் கேட்டு மனமிரங்கினார். எலியாவுக்கு அருளிய வரத் தைப்போல் இரட்டிப்பாய் எலிசாவுக்கு ஆவியின் வரத்தை அருளினார்! நீரும் அவ்வாறு கண்ணீரோடு ஜெபித்தால் உம்மையும் தேவன் தம் பரிசுத்த ஆவியானவரின் வரங்களி னால் நிரப்பிடுவார். அப்பொழுது உம் ஜெப நேரம் தேவ னோடு சஞ்சரிக்கும் நேரமாயிருக்கும். எந்தக் காரியத்தைக் குறித்து நீர் ஜெபித்தாலும், அக்காரியத்தை உள்ளவாறு நன்கு அறிந்துகொள்ளவியலும். அடுத்து நீர் செய்ய வேண்டியதென்ன என்பதையும் உமக்கு ஆவியானவர் வெளிப் படுத்துவார்! அவைகளை விசுவாசத்தோடு செயல்படுத்த வல்லமையுள்ள வரத்தை உமக்கு அருளுவார்! ஆம், உம் வாழ்க்கையில் அற்புதங்கள்மேல் அற்புதங்கள் நிகழும்!

'பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதா வானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரி சுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?' *(லூ. 11:13)* என்ற வேத வாக்கின்படி, தேவன் தாமே உம்மைத் தம் ஆவியானவராலும், ஆவியின் வரங்களாலும் அளவில்லாமல் நிரப்புவாராக!

டி. ஜி. எஸ். தினகரன்

1935ம் ஆண்டு ஜுலை மாதம் முதல் தேதியன்று, இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் கிராமத்தில் பிறந்தார். கல்லூரிப் படிப்பை முடித்தபின், 1955ம் ஆண்டு ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவில் அலுவலாளராகச் சேர்ந்தார். தற்போது அதன் சென்னை தலைமைக் காரியாலயத்தில் பணியாற்றி வருகிறார்.

தமக்குக் கிடைத்த நேரமெல்லாம் கிறிஸ்துவைப்பற்றி ஓயாது மக்களுக்குச் சொல்லி வருகிறார். பல்லாயிரம் மக்கள் பயனடைந்து வருகிறார்கள். அவர் செய்தியால் மனம் திரும்பியவர்களும், உடல் பிணி நீங்கப்பெற்றோரும் பலர். பொதுப் பிரார்த்தனைக் கூட்டங்கள் நீங்கலாக, இவரது செய்திகள் ரேடியோ, கிராமஃபோன் தட்டுகள், ஒலி நாடாக்கள், நூல்கள், நிழல்படங்கள், திரைப்படங்கள் மூலமும் மக்களுக்குக் கிடைக்கின்றன.

இவர் இயேசு அழைக்கிறார் என்ற பத்திரிகையை வெளியிட்டு வருகிறார். குணமாக்கும் தழும்புகள், உருகாயோ நெஞ்சமே, *Healing Stripes, Love So Amazing* என்ற நூல்களை எழுதியுள்ளார்.

CLS

PRAYER IS VICTORY
by
D. G. S. DHINAKARAN

விலை ரூ. 3·00 (இந்தியாவில் மட்டும்)